Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

03 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 17 செவ்வாய்கிழமை (01.01.2002) தொலைபேசி 3378 ஒலி 13

மல்லிகா மிக்சர் மாளிகை
நறு நறு மொறு மொறு
காரமான சுவையுடன்
ரேஸ்றி பொம்பே ரிப்பீஸ்
ரேஸ்றி ரைற்றானிக் காரவடை
ரேஸ்றி மரவள்ளி பீஸ்
இல 149, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்.

★ யுத்த நிறுத்தம் ★ பொருளாதாரத் தடை நீக்கம்

# விஷேட வர்த்தமானி மூலம்

# அரசு நாளை அறிவிக்கும்

## ஜோசப்பிடம் ரணில் தெரிவிப்பு





(நமது நிருபர்)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு தமிழ் மக்களுக்கு வழங்கும் புத் தாண்டு பரிசாக வன்னிக்கான பொருளாதார நடவடிக்கைகளை நாளை புதன்கிழமை முதல் நீக்கவுள்ளது.

இத்தடை நீக்கத்துக்கான உத்தியோகபூர்வ வர்த்தமானி அறிவித்தல் நாளை வெளிவரும் இதே வேளை அரசாங்கம் கடைப்பிடித்துவரும் மோதல் தவிர்ப்பை யுத்த நிறுத்தமாக அறிவிப்பதுடன் அதனை மேலும் நீடிக்கும் அறிவிப்பயையும் இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் விடுக்கவுள்ளது.

இத் தகவலை மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் நேற்று இரவு வலம்புரிக்கு தெரிவித்தார்.

வன்னிக்கான பொருளாதாரத் தடைநீக்கம், யுத்த நிறுத்தம் மோதல் தவிர்ப்பு ஆகியவற்றின் மத்தியில் வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை ஜோசப் பரராஜசிங்கம் எம். பி நேற்று மாலை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார். இப் பேச்சு வார்த்தை சுமார் இருபது நிமிடங்கள் வரை நீடித்தது.

இதன் போது வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கம் சம்பந்தமாகவும் அரசின் மோதல் தவிர்ப்பை யுத்த நிறுத்தமாக நீடிப்பது தொடர்பாகவும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

எமது
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்



- வலம்புரிக் குடும்பம் -

### கிளாலி, நாகர்கோவிலில்

## படையதிகாரிகளும் புலிகளும் சந்தித்து உரையாடினர்!

(மந்திகை)

கிளாலி, நாகர்கோவில் முன்னரங்கப்பகுதிகளில் படைத்தரப்பின் உயரதிகாரிகளும் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களும் சந்தித்து கலந்துரையாடியதாக படைத்தரப்பு வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகி உள்ளது.

யுத்தநிறுத்தம், மோதல் தவிர்ப்பு, தொடரும் நிலையில் படைஉயரதிகாரிகளும் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் சந்தித்துக் கைகுலுக்கி தமது நட்பை பரிமாற்றிக் கொண்டதாகவும் சிநேக பூர்வ முறையில் இரு தரப்பினரும் கலந்துரையாடியதாகவும் தெரிய வருகின்றது. (இ.23)

## நாட்டின் பொருளாதார வீழ்ச்சி பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும்

### மத்திய வங்கி அபாய அறிவிப்பு !

(கொழும்பு)

இலங்கை மிகமோசமான பொருளாதாரப்பின்னடைவை எதிர் நோக்கியுள்ளதாக மத்தியவங்கி அபாயமணி அடித்துள்ளது.

நாட்டின் முக்கிய கடன் பிரச்சினைகள் பாரிய விஷ்வருபம் எடுத்து சிக்கல்களை உருவாக்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் பொருளாதார வீழ்ச்சி மேலும் பல பிரச்சனைகளை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தையே முழுமையாக ஆட்டம் கண்டுவிடச் செய்யும் என மத்தியவங்கி எச்சரித்துள்ளது.

கடந்த வருட 3ம் காலாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி


(2ம் பக்கம் பார்க்க)

## வெளிவிவகார அமைச்சர் நோர்வே தூதருடன் சந்திப்பு

(கொழுப்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவின் அண்மைய இந்திய விஜயம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னான்டோ நோர்வேத் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க்கை நேற்று சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் குறித்தும் விடுதலைப்புலிகளின் யுத்தநிறுத்தம், அரசின் மோதல் தவிர்ப்பு போன்ற விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (வ)



காணாமற் போனோர் சங்கப் பிரதிநிதிகளும், மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் நேற்று யாழ் அரச அதிபர் கசண்முகநாதனை யாழ் செயலகத்தில் சந்தித்த காட்சி



காணாமற் போனோர் சங்க செயலாளர் யாழ் அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கின்றார்.

(படங்கள்: கோபி)

### ஊழல் குற்றவாளி மேத்தா காலமானார்

(புதுடில்லி)

1992ம் ஆண்டு இந்திய நாட்டை உலுக்கிய பங்குப்பத்திர ஊழல் வழக்கில் முக்கிய குற்றவாளியாகக் குறிப்பிடப்பட்ட பங்குத் தரகர் கஸ்ரர் மேத்தா (வயது 47) நேற்று முன்தினமிரவு மும்பை மருத்துவமனையில் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த இவருக்கு அன்றைய தினம் நெஞ்சுவலி ஏற்பட்டது இதனையடுத்து சிறைச்சாலை

(2ம் பக்கம் பார்க்க)

### சடலம் புலிகளிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் கடந்த 24ம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த இளைஞனின் சடலம் நேற்று குடாக்கடலூ

(16ம் பக்கம் பார்க்க)

### காணாமல் போனோர் சங்கத்தினர்

## யாழ்.அரச அதிபரிடம் நேற்று மகஜர் கையளித்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் 96\97ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போனோர் தொடர்பான விபரங்களை உடனடியாக பெற்றுத்தரவேண்டும் எனக் கோரி வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமல்போனோர் சங்கம் நேற்று யாழ்அரச அதிபர் கே.சண்முகநாதனிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

யாழ்செயலகத்தின் இம்மகஜர் கையளிப்பு நிகழ்வு நேற்று மாலை 4.30மணியளவில் இடம்பெற்றது. 16ம் பக்கம் பார்க்க)

மிக விரைவில்
எதிர்பாருங்கள்
வலம்புரியின்
வாரமலர்
வானவில்

## யாழ்ப்பாணம் - மாநகரசபை

### துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்தைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2002

கீழ்க்காணப்படும் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்தை 15.1.2002ந் திகதி தொடக்கம் 31.12 2002 ந் திகதி வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணப்படும் படிவக் கட்டணத்தையும், கேள்விப் பிணைப்பணத்தையும் செலுத்துவதன் பேரில் 10.01.2002 ந் திகதி வியாழக்கிழமை பி.ப 3.00 மணி வரையும் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். எதிர்வரும் 11 01 2002 ந்திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு முன் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதே தினம் பி ப 2 30 மணிக்கு கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் திறந்து பரிசீலிக்கப்படும். கேள்விச்சித்திகாரராகத் தெரிவு செய்யப்படுபவர் மூன்று தினங்களுக்குள் குத்தகையின் பகுதிப் பணத்தை ஜி எஸ்.ரியுடன் செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். அத்துடன் தேவையேற்படின் குறித்தநிலையத்தை இடமாற்ற வேண்டியேற்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

மேலதிக விபரங்கள் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| விபரம் | கேள்விப்படிவக் கட்டணம் (ஜி எஸ். ரி உட்பட) | மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணைப் பணம் | ஜி.எஸ் ரி நீங்கலாக நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்தகேள்வித் தொகை |
| --- | --- | --- | --- |
| 1. யா/வைத்தியசாலை முன்பாகவுள்ளதுவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையம் | 281.25 | 2500/- | 365150/- |

இ. இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
28.12.2001.

(சி-3094)

## சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடம் நடாத்தும்

## ஐயப்பசாமி மகரஜோதி புதிய சித்திரத்தேர்

# ரதபவனிப் பெருவிழா

**காலம்: நாளை (02-01-2002) புதன்கிழமை**

**நேரம்: பி. ப. 4.00 மணி முதல்**

இலங்கை இந்துமத குருபீடாதிபதி-சிவாகமஞானி-கலாநிதி
அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்
அவர்களின் அருளாசியுடன் விழா நடை பெறும்.

கொழும்பு-13, சென் அன்ரனீஸ் மாவத்தை, தம்பையா முதலியார் சத்திரத்திலுள்ள சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து சர்வ அலங்கார பூஷிதராக சுவாமி ஐயப்பன் ரதத்தில் ஆரோகணித்து பவனி வர, பட்டத்து அலங்கார யானை ஆடிவர, வேட்டைக் குதிரைகளும் துள்ளிவர, கரகாட்டம், காவடியாட்டம், கண்டியர்நடனம், நர்த்தனம் புரிய தவில், நாதஸ்வர இசைமாரி பொழிய பக்தர்களின் சரணகோஷம் வானைப் பிளக்க ஐயப்பன் ரதத்தில் ஆரோகணித்து வீதி உலா வருவார்.

## ரதபவனி வரும் வீதிகள்:

ஜிந்துப்பிட்டி வீதி, கன்னாரத்தெரு, ஸ்ரீகதிரேசன் வீதி,
செட்டியார் தெரு, சென். அன்ரனீஸ் மாவத்தை, ஜெம்பட்டா வீதி,
சங்கமித்த மாவத்தை, வென்றோயன் வீதி வழியாக
சித்தி விநாயகர் ஆலயத்தை வந்தடைவார

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி, சபரிமலைக் "குருமணி"
கலாநிதி ஸ்ரீஐயப்பதாஸன்சாம்பசிவசிவாச்சாரியார் J.P
அவர்கள் தலைமையில் ரதபவனி விழா நடைபெறும்.

| ரதபவனி உபயம் | அன்னதான உபயம் | பிராயச்சித்த அபிஷேக உபயம் |
| --- | --- | --- |
| சாமிமார்களும், அடியார்களும் | S K. சிவா குடும்பம் (சுவிஸ்ஸர்லாண்ட்) | மு. ராதாகிருஷ்ணன் (கண்டி) |

புதிய சித்திரத்தேர் அன்பளிப்பு: சரவணமுத்துஜெயகாந்தன குடும்பம்

**அனைவரும் வருக!**
**ஐயப்பன் அருள் பெறுக!!**

## சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடம்

751/A, புளுமெண்டால் வீதி, கொழும்பு-13
தொ. பேசி. 072-422239

(C/3098)

# செய்தித் துளிகள்

## லங்கா சீமெந்து ஊழியர்களுக்கு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்துநிறுவன ஊழியர்களின் அடுத்தகொகுதியினருக்கான சுயவிருப்பு ஓய்வு நஷ்டஈட்டு கொடுப்பனவு, சேவைக்கால கொடுப்பனவு என்பன எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை நிறுவனத்தின் தற்காலிக காரியாலயமான இணுவிலில் வைத்து வழங்கப்படவுள்ளது. (உ)

## கோக்குவிலில் கண்ணிவெடி மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்குப்பகுதியில் பிறவுண் வீதிக்கு அருகாமையிலுள்ள வெறுங்காணியில் இராணுவத்தினர் நேற்று கண்ணி வெடியொன்றினை மீட்டெடுத்துள்ளனர்

இராணுவ பொறியியலாளர்கள் பின்பு அதை செயலிழக்கச் செய்தனர்.

நீண்ட காலத்திற்கு முன்பு அக்கண்ணிவெடி அங்குபுதைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது (எ-19)

## இராணுவம் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

அராலித்துறை வெளியில் இராணுவத்தினர் நேற்றுமுன தினம் முதல்இராணுவபயிற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

இப்பயிற்சிநடவடிக்கையின் போது எழும்துப்பாக்கி மற்றும் ஷெல்சத்தங்களால் அப்பகுதிகள் அதிர்ந்தவண்ணம் உள்ளன. [உ-5.75]

## தையல் மெஷின் வழங்கல்

(மானிப்பாய்)

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பின் முன்னாள் அமைச்சர் கே. என் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சு நிதியிலிருந்துகொள்வனவு செய்யப்பட்ட தையல் மெஷின்களில் ஒரு பகுதியை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைஎல்லைக்குள் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தையல் பயின்ற விதவைகளுக்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைத்தலைவர் வெ. அ. ஜோன்சன் அண்மையில்வழங்கினார். [எ-232]

## தப்பியோடிய இரு படையினர் அகப்பட்டனர்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இருவர் கிரனேட்டுகளுடன் நேற்று வெல்லம்பிட்டி பொலிஸாரினால்கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் பல கொள்ளை, கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களென பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)

## செயலாளருக்கு அறிவுறுத்தல்

(மந்திகை)

கடந்த டிசம்பர் 28ம்திகதி வெள்ளியன்று வடமராட்சிப் பகுதியிலுள்ள பிரதேசசெயலர்களுக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பருத்தித்துறை நீதிபதி நீதிமன்றநடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்தினார். (எ-23)

## 450கிராம் பாணின் விலையை 1 ரூபாவால்குறைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

பாண விலை நிர்ணயம் தொடர்பாக நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே. சண்முகநாதன் தலைமையில் கூட்டமொன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க உறுப்பினர்கள், விலைக்கட்டுப்பாட்டுஅதிகாரிகள், நுகர்வோர் பாதுகாப்புச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாணின் விலை அதிகரித்திருப்பது நுகர்வோரை மோசமாகப் பாதிப்படையச் செய்யும் எனவும், விலை கட்டாயமாக குறைக்கப்பட வேண்டுமெனவும நுகர்வோர் பாதுகாப்புச் சங்க உறுப்பினர்களால் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இதனையடுத்து தற்பொழுது 15 ரூபாவுக்கு விற்கப்படும் 450 கிராம் பாண் இன்று முதல் பேக்கரிகளில் 14 ரூபாவுக்கு விற்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பாண் வாங்கும் பாவனையாளர்கள் பாணின் நிறை 450 கிராம் சரியாக உள்ளதா என்பதை சரிபார்த்து வாங்குமாறுகேட்கப்பட்டுள்ளனர்.

இக்கூட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சங்கம சார்பில் தலைவர் அ. பஞ்சலிங்கம் செயலாளர் திருமதிசரோஜா சிவச்சந்திரன் பொருளாளர் எஸ். திருக்குமரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ

எமது வாடிக்கையாளர்களுக்கு ஜெசித்தாரா தரும் புதுவருட வெகுமதி குங்குமப்பூ புரியாணி வாங்கும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் வேடிக்கையான மூவர்ண கலண்டர் இனாம் மற்றும் உணவு வகைகளை பெறுபவர்களுக்கும் கலண்டர் இனாம்! கையிருப்பு முடியும் வரை முந்துங்கள். படைக்குப் பிந்தினாலும் பந்திக்கு முந்துங்கள்;

# ஜெசித்தாரா

## உங்கள் விருந்தகம்

19/3 சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை சுண்டுக்குளி.

★ சுவையின் மறுநாமம் - ஜெசித்தாரா
★ உங்கள் அடுத்த உணவு வேளைக்கு-ஜெசித்தாரா

[கி-3103]

# சங்கே முழங்கு

## திருத்தப்படாத ஒழுங்கை: மக்கள் கடும் விசனம்

நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் ஆலயத்தின் முன்பாக வடக்காகவும், தெற்காகவும் செல்லும் இரு பிரதான ஒழுங்கைகளில் திருத்தத்திற்கென கற்கள பறிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்தும் கூட குறித்த திருத்த வேலைகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை.

இவ் ஒழுங்கைகளால் பயணம் செய்யும் பாதசாரிகள் மற்றும் வாகனசாரதிகள் இதனால் பெரிதும் சிரமத்தை அனுபவித்து வருகிறார்கள்.

தற்போது மழை காலம் நிலவுவதையடுத்து இச் சிரமம் மேலும் அதிகரித்துள்ளது.

இது விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்களிடம் உரிய விதத்தில் எடுத்துக் கூறியும் கூட சில உறுப்பினர்கள் அசமந்தப் போக்கை கடைப்பிடிக்கின்றனர்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்காதவிடத்து பொது மக்கள் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக
க. கணேசராசா
(நீர்வேலி)

### உருத்திரபுரம்
## மத்திய மருந்தகம் மீண்டும் பழைய இடத்தில்

(வவுனியா)
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உருத்திரபுரம் மத்திய மருந்தகம் மீண்டும் பழைய இடத்தில் திறக்கப்பட்டுள்ளது

மருந்தக கட்டடத்தை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் வி. ஐயாத்துரை திறந்துவைத்தார்.

யுத்த நடவடிக்கையால் சேதமடைந்திருந்த அக்கட்டடம் பொதுமக்களினால் வழங்கப்பட்ட அன்பளிப்பு நிதிகளைகொண்டே புனரமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-5)

### மட்டு. கடல் எல்லைக்குள்
## வெளிநாட்டார் மீன்பிடிப்பு தடுக்க கோரிக்கை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்ட கடல் எல்லைக்குள் வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்கள மீன்பிடியில் ஈடுபட்டுவருவதைத்தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனமட்டக்களப்புமாவட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்புமாவட்ட கடல் எல்லைக்குள் 10 கி. மீற்றர் தூரம் ஊடுருவிவெளிநாட்டு கப்பல்கள் மீன்பிடியில் ஈடுபடுவதுடன்,தேவையற்ற மீன்களை கடலில் வீசிவிட்டுச் செல்வதால் கடற்பகுதி மாசடைவதாகவும் மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாகமாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் வெளிநாட்டமைச்சு மற்றும் பாது காப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை அடுகவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். [உ-5]

## அரசியல் கட்சிகளின் தலைவர்கட்கான கூட்டம்

(கொழும்பு)
பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளினதும் தலைவர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் நாளை நடைபெறவுள்ளது.

அடுத்த பாராளுமன்றக் கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவே இக்கூட்டம் நடைபெறவுள்ளது. (உ-5)

### கத்தோலிக்க எழுத்தாளர்களின்
## விபரங்களை நூல்வடிவில் வெளியிட முயற்சி

(யாழ்ப்பாணம்)
கத்தோலிக்க எழுத்தாளர்களின் விபரங்களை நூல் வடிவில் வெளியிடுவதற்கான முயற்சியை பாதுகாவலன் ஆசிரியர் ரூபன் மரியாம்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

இந் நூலில் இறந்துபோன எழுத்தாளர்கள் இடம்பெயர்ந்து புலம் பெயர்ந்து வாழும்எழுத்தாளர்கள்இலைமறை காயாகவாழும் எழுத்தாளர்கள் ஆகியோர் உள்ளடக்கப்படவுள்ளனர்.

இது தொடர்பாக சகல கத்தோலிக்க எழுத்தாளர்களும் தமக்கு கிடைத்தவிருதுகள பாராட்டுக்கள், பரிசில்கள் என்பன தொடர்பான முழுவிபரங்களுடன் உரிய சேவை! ஒன்றை 360, பிரதான வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

### போரினால் பாதிக்கப்பட்ட
# சிறார்களுக்கு உதவ புதிய திட்டம்
### இம்மாதம் முதல் அமுல்

(தென்மராட்சி)
போரினால் பாதிக்கப்பட்ட 120 குடும்பங்களைச் சேர்ந்த 240க்கு மேற்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும்திட்டமொன்றினையாழ். மாவட்ட சர்வோதய சிரமதான சேவை இயக்கம் யு.எஸ்.எயிட்ஸ்நிறுவனத்தின் உதவியுடன் ஜனவரியில்செயல்படுத்தவுள்ளது.

இத்திட்டத்துக்கானபயனாளிகள் செல்வபுரம், மயிலங்காடு, துணைவி, கோண்டாவில் வடக்கு ஆகிய நான்கு கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என சர்வோதயத்தின் செயல்திட்டப் பணிப்பாளர் எஸ் வி. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

போரினால்பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்துதெரிவு செய்யப்பட்ட சிறுவர்களுக்கு மனஆற்றுப்படுத்தும் பணி, மாலைநேர வகுப்புகள், மற்றும் தலைமைத்துவப் பயிற்சிகளும் இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன், இச்சிறுவர்களுக்குவேண்டியபாடசாலை உபகரணங்களும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-77)

## இராசிபலன்

1/01/2002
(மார்கழி 17, செவ்வாய்)
துதியை பி.ப. 1.53 வரை
பூசம் ந.இ. 11.57 வரை
ராகுகாலம் 3 29 – 4.59
சுபநேரம் 10 59 – 12.29
சித்தம்

**மேடம்**
மனச்சோர்வு, விரும்பாத உறவு, காரிய தாமதம்,நிலை மாற்றம்.

**இடபம்**
காரிய அனுகூலம், வாக்கு மேன்மை, அந்நியர் சந்திப்பு, பிரயாண நன்மை.

**மிதுனம்**
கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், மனப்பயம், பொருள் விரயம்.

**கடகம்**
காரிய அனுகூலம்,தொழில் விருத்தி, வசீகரம், சயன சுகம்.

**சிங்கம்**
காரிய அலைச்சல், குடும்ப சுகம், பிரயாணம், உறவினர் மனஸ்தாபம்.

**கன்னி**
நல்ல வரவேற்பு, காரியம் கைகூடும்,பொருள்சேர்க்கை, தெய்வ தரிசனம்.

**துலாம்**
தொழில் நன்மை, தூர தேசச் செய்தி, அதிகாரம், காரிய சித்தி.

**விருச்சிகம்**
பிரயாணம், வஸ்திர சுகம், ரோகம், காரிய பங்கம்.

**தனுசு**
நண்பர்கள் மனக் கசப்பு, காரிய தாமதம், பிரயாண பயம், குடும்ப மகிழ்ச்சி.

**மகரம்**
திடீர் பயணம், நண்பர்கள் சந்திப்பு. முயற்சி நிறைவேறும், தொழில் கஷ்டம்.

**கும்பம்**
சந்தோசமான சம்பவம். தொழில் மேன்மை, போசன சுகம், காரிய அனுகூலம்.

**மீனம்**
வியாபார சிறப்பு, குடும்பக் கவலை, முயற்சி தாமதம், வியாதி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது.)

-வளவன்

## வைத்தியரின் அனுமதியின்றி நோயாளர் வெளியேற்றம்
### பணிப்பாளர் பொலிஸில் புகார்

(யாழ்ப்பாணம்)
யாழ். போதனா வைத்திய சாலை விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்றுவந்தநோயாளர்கள் 10 பேர் சம்பந்தப்பட்ட வைத்தியரின் அனுமதியின்றி வீடு சென்றுள்ளனர்.

இதுகுறித்து வைத்தியசாலைப் பணிப்பாளர், வைத்தியசாலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (உ-104)

### தற்காப்புக் கலை
## பயிற்றுவிக்குநிலையங்களை பதிவு செய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில்இயங்கிவரும் தற்காப்பு கலைபயிற்றுவிக்கும் நிலையங்களின் விபரத்தை பதிவுசெய்யுமாறு யாழ். செயலக விளையாட்டுத்துறை அறிவித்துள்ளது

தேர்தல் காரணமாக மற்படி பதிவுப் பணிகளில் தடங்கல் ஏற்பட்டிருந்த போதிலும் விரைவாக இப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (உ 19)

### நாடு பூராகவும்
## 280எழுதுவினைஞர்களுக்கு இன்று முதல் இடமாற்றம்

(மானிப்பாய)
யாழ். செயலகத்தில் உள்ள கணக்காய்வுக் கிளையில் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து பணியாற்றிய 5 எழுதுவினைஞர்கள் இன்று முதல் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

இவர்கள் திருகோணமலை மன்னார். வவுனியா ஆகிய இடங்களில் பணி புரிவதற்கு கணக்காய்வாளர் திணைக்களத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் 280 பேர் பல்வேறு இடங்களுக்கும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் (உ-120)

### புதிய ஆட்சியில்
## மாதம்ஒரு செய்தியாளர் மாநாட்டைகூட்ட திட்டம்

(கொழும்பு)
பிரதமர் ரணில்விக்கிரமசிங்க மாதம் ஒருதடவை செய்தியாளர் மாநாட்டை நடத்த தீர்மானித்துள்ளார்.

அரசாங்கத்தின் கொள்கைகளையும் அரசாங்கம்,மக்கள் சார்பில் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கிறது என்பதை அவ்வப்போது தெளிவுபடுத்துவதற்கு இச்சந்திப்பை அவர் பயன்படுத்துவார்.

அத்துடன் 20வருடங்களாக நடைபெற்றுவரும்யுத்தத்தை நிறுத்தும் நடவடிக்கைகள் பற்றி அவ்வப்போது சகல கட்சிகளுக்கும் எடுத்துரைத்து சுமுகநிலையைப் பேணுவதற்கு அமைச்சர்கள் கருஜெயசூரிய. ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (...ந)

## மாநகர முதல்வர் யார்? மங்களநேசன் கேள்வி

(யாழ்ப்பாணம்)
யாழ். மாநகரசபையின் முதல்வர் பதவி இன்றுவரை நிரப்பப்படாமல் உள்ளது. இது விடயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி இழுத்தடிப்புச் செய்து வருவதாகவே கருதமுடிகிறது,

யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று மாநகரசபையின் பிரதி முதல்வர் செ. சந்தையன் தலைமையில் நடைபெற்றபோது மாநகரசபை உறுப்பினர்மனுவல் மங்களநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் :

முன்னாள் முதல்வர் என். ரவிராஜ் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டதையடுத்து சுமார் ஒரு மாதமாக முதல்வர் பதவி நிரப்பப்படாதுள்ளது,

இதேவேளை முன்னாள் முதல்வரின் பதவி விலகலை உறுதிப்படுத்தும் கடிதம் இன்றுவரை யாழ். மாநகர சபைக்கு வந்து சேரவில்லை,

இதனால் முதல்வர் தெரிவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடம் வேண்டுமென்றே இழுத்தடிப்புச் செய்கிறது என்பது புலனாகிறது என்று குறிப்பிட்டார், (உ-10,9]

## நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)
யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்இன்று பிற்பகல் 4.30மணிக்கு 'முகமூடி' நாடக ஆற்றுகை இடம்பெறவுள்ளது. (உ-2)

## சிறுவிளம்பரம்

### தவறி விட்டது

அல்லாரை தெற்கு. மீசாலையைச் சேர்ந்த தங்கராசா ஜெயந்தினி என்பவருடைய விசேட அடையாள அட்டையும் ஒரு தொகைப் பணமும் யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (சி-3100)

### தவறி விட்டது

மானிப்பாய் வீதி, மதவடி, கோப்பாய் மத்தியைச்சேர்ந்த திருமதி மசேஸ்வரி மகாலிங்கத்தின் விசேட அடையாள அட்டை யாழ்ப்பாணம் கோப்பாய் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-3101)

### (O. L) MATHS

37 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் தரம் 6லிருந்து O. L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்துகுறைந்த காலத்தில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும்.

ச. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி (4137)

# அரசு- புலிகள் யுத்தநிறுத்தம் - மோதல் தவிர்ப்பு

# புதுவருடம் கொண்டாட்டங்கள் மும்முரம் !

(கொழும்பு)

கொழும்பில் இம்முறை புதுவருடப்பிறப்பு குதூகலமாக கொண்டாடப்படுகின்றது. கடந்த ஏழுவருடங்களுக்குப் பின் யுத்தநிறுத்தம் மோதல் தவிர்ப்பு சூழ்நிலையில் இம்முறை புத்தாண்டு கொண்டாட்டங்கள் நாட்டின் சகலபாகங்களிலும் களை கட்டியுள்ளது.

புத்தாண்டுதினத்தை ஒட்டி கொழும்பிலும் அதன் சுற்றுப புறங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டுள்ளது.

கொழும்பில் இம்முறை போக்குவரத்து விதிகளைப் பொலிசார் கடுமையாகஅமுல் படுத்கின்றனர்.

கொழும்புமாநகரின் சுற்றுப் புறங்களில் பெருமளவில் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுளளனர்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இம்முறை சிறுவர்முதல் முதியோர்வரை ''பட்டாசு'' கொளுத்தி புதுவருடத்தைக் கொண்டாடி வருகின்றனர், மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ள வேளையில் திருடர்களின் பயம் அதிகரித்துள்ளதாகவும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதில் பொலிசார் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## உணவுப் பண்டங்களுக்கு மேலதிக இறக்குமதி வரி நீக்கம்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அறவிடப்பட்ட மேலதிகமான 40சதவீதவரி இவ்வருடம் மார்ச்மாதம் 31ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

உள்ளூர் உற்பத்திகளின் உற்பத்திப் பொருட்களுக்கு சிறந்தகிராக்கியைஏற்படுத்துவதற்காகவே இவ்வரிநீடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மார்ச்31ம் திகதிவரைநீடிக்கப்பட்டுள்ளஇந்த40சதவீதமேலதிக வரிகோதுமைமா, சீனி உருளைக்கிழங்கு மரக்கறி எண்ணை குழந்தைகளுக்கானபால்மா வகைகள் போன்ற அத்தியாவசியஉணவுப் பொருட்களுக்குச் செல்லுபடியாகமாட்டாது

அதேபோல் உள்ளூர்உற்பத்தியாளர்கள் பயன்படுத்தும் சுங்கத்தீர்வையற்ற மூலப் பொருட்களுக்கும் இந்தவரி அறவிடப்பட மாட்டாது அத்தியாவசிய மற்றவைகள என்றுகருதப்படும் பொருட்களுக்குமாத்திரமே மேலதிகவரி அறவிடப்படுவதினால் இதன் மூலம் அரசாங்கத்தின் வருமானம் முந்நூறு கோடிரூபாவினால் அதிகரிக்கும்என எதிர்பாக்கப்படுகிறது. (வ)

## இலங்கை அணியிடம் சிம்பாவே படுதோல்வி

[கொழும்பு]

கொழும்பு எஸ், எஸ். கி விளையாட்டு மைதானத்தில் சிம்பாவே, இலங்கை அணிகளுக்கிடையில நேற்று நடந்து முடிந்த முதலாவது கிறிக்கெற் ரெஸ்ட் போட்டியில இலங்கையணி ஒரு இனிங்ஸ் சில் 166 ஓட்டங்களால் வெற்றியீட்டியுளளது

முதல் இனிங்ஸ்சில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி 6 விக்கெட் இழப்பிற்கு 586 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதில் குமார் சங்ஹகாரா 128 ஓட்டங்களையும் திலான் சமரவீர ஆட்டம்இழக்காமல் 123ஓட்டங்களையும் கஷான் திலகரட்ண 96 ஓட்டங்களையும் சனத் ஜெயசூரியா 92 ஓட்டங்களையும் பெற்றனர்

முதல் இனிங்சில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவேயணி அனைத்து விக்கெற்களையும் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது

பந்துவீச்சில் முத்தையா முரளிதரன் 53 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுக்களை கைப்பற்றினார்.

இனிங்ஸ் தோல்வியை தவிர்பபதற்காக இரண்டாவது இனிங்ஸ்சில் களமிறங்கியசிம்பாவே யணி அனைத்து விக்கட் இழப்பிற்கும 236 ஓட்டங்களை மட்டுமே பெற்றது சாவிஸ் பிராண்ட் 44 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் முத்தையா முரளிதரன் 35ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுக்களை கைப்பற்றினார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரெஸ்ட் போட்டி எதிர்வரும் 4ம்திகதி கண்டியிலும் மூன்றாவது ரெஸ்ட்போட்டி 12ம் திகதி காலியிலும் நடைபெறவுள்ளது, (ந-4

### ஊழல்

அவரை மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவரது உயிர் பிரிந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள தெரிவித்துள்ளன. (இ-4)

### நாட்டில்

மொதப் பொருளாதாரத்தில் 3 7 வீதததால் வீழ்ச்சி கண்டுளளது.

பொருளாதாரம் வளர்ச்சியடையாது எதிரமறையாக 0.7 வீதம வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது

இதேவேளை நிதித்துறை அமைச்சர் பத்துல குணவர்த்தனா நாட்டின பொருளாதாரம் மேலும் மோசமாகுமென்று எச்சரித்துள்ளதுடன நாடு எதிர்பார்கும் வருமானத்தை விட திருபபிச் செலுத்தவேண்டிய கடன்தொகை சுமார் 217 மில்லியன் அமெரிக்க டொலராக இருக்குமென்றும் கூறியுள்ளார். (இ-4)

### சடலம்

வைத்திய சாலையில் நேற்றுக்காலை 8 மணியளவில் சடலத்தைப் பொறுப்பேற்றுக்கொண்ட படையினர் அதனை குருநகர் கடற்பகுதியில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம்ஒப்படைத்தனர்.

சடலத்தைப் பொறுப் பேற்ற செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் குடாக்கடல் ஊடாக அதனை எடுத்துச் சென்று விடுதலைப்புலிகளின் பிரதி நிதிகளிடம் ஒப்படைத் துளளனர். (இ-10)

## பரு. ஆஸ்பத்திரியில் தரமற்றஉணவுவிநியோகம் நோயாளர் புகார்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அங்கு கடமையாற்றும் ஊழியர்கள், மற்றும் நோயாளர்களுக்கு வழங்கப்படும் உணவுகள் தரமற்றதாக இருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

திட்டமிடப்படாத வகையில் திரும்ப ஒரே உணவு வழங்கப்படுவதுடன், போஷாக்கான உணவுகளும் இவற்றில் அடங்குவதில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது; (உ-23)

## இரு இராணுவத்தினர் கைதாகினர்

[கொழும்பு]

தேர்தல் தினத்தன்றுகண்டி உடவலப்பிரதேசத்தில் முஸ்லிம்கள் படுகொலை தொடர்பாக மேலும் இரு இராணுவ அதிகாரிகளை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இராணுவலான்ஸ்கோப்ரல்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக கண்டி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி குலசிங் உடுகம்பல தெரிவித்துள்ளார். (இ-4)

## சுதந்திரக்கட்சி போராட்டம் நடத்தும்

[கொழும்பு]

வாழ்க்கைச் செலவைக் கண்டித்து சிறிலங்காசுதந்திரக்கட்சி நாடு தழுவியரீதியில் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளது-

ஐக்கிய. தே. முன்னணி ஆட்சியமைத்ததன் பின் மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவு மலை போல உயர்ந்துள்ளது இதனைக் கண்டித்தும், பொது ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு கோரியும் சுதந்திரக்கட்சி போராட்டம் நடத்தவுள்ளதாக தொழிற் சங்கத் தலைவர் டபிள்யு எச்: பியதாஸ தெரிவித்துள்ளார். (வ)

### விழிப்புக் கருத்தரங்கு

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழுள்ள புளியங் கூடலில் இன்று, 'தொற்று நோய்களும் அவற்றைப் பரவாமல் தடுபபதற்கான வழி முறைகளும்', என்ற தலைப்பிலான வீடியோப் படக்காட்சியும் கருத்துரையும் இடம் பெறவுள்ளது

புளியங்கூடல் நெசவு மண்டபத்தில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வு. இப்பகுதியில் நெருப்புக்காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருவதையடுத்து ஊர்காவற்றுறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆர் இந்திரஜித்தினால் ஏற்பாடு செய்யபபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-75]

### பாடசாலைகள் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

2002ம் ஆண்டு முதலாம் தவணைக்கான பாடசாலைகள் நாளை ஆரம்பமாகின்றன,

பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், கல்வியியற்கல்லூரிஎன்பனவும் நாளை ஆரம்பமாகின்றன.

இதேவேளை இவ்வாண்டு முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சை ஏப்ரல் மாதத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தககது. (உ-104)


SPOKEN ENGLISH
PRIVATE SCHOOL



426 (302)
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

நாகலிங்க சுவாமிகள்
வீதி, சங்கானை.
(4139)


## மாலைதீவு இளம் கிரிக்கெட் வீரர்கள் இலங்கை வருகை

(கொழும்பு)

மாலைதீவில்இருந்து பாடசாலை கிரிக்கெட் அணிஒன்று இலங்கைக்கு முதல் தடவையாக வந்துள்ளது.

இவ்வணி இலங்கையில் மொத்தம் ஆறு போட்டிகளில் விளையாடவுள்ளது:

மாலைதீவில் உள்ள முன்னணி பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 11 வயதிற்குட்பட்ட வீரர்களேஇலங்கை வந்துள்ளனர். (உ-2)

### வலம்புரியே நீடூழி வாழி

நலமுடன் பிறந்துமே தவழ்ந்திடும் வலம்புரி
நாளுமே காலையில் கைகளில் தவழுவான்
புலத்தினில் கல்விசார் செய்திகள் ஆய்வுகள்
புதிய நற்சிந்தனை கட்டுரை தருபவன்
கலங்காது பணிதனில் கலங்கரை விளக்காக
காலத்தால் வளர்ந்துநற் சுடரொளி பரப்புவான்
புலத்தினில் நிலைத்திட்ட இருள்தனை நீக்கிட
பணிசெய்து பொலிவுடன் வலம்புரி வாழ்கவே;

அல்வையூர்
கே. ஆர். திருந்துவராஜா


எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துகள். சாந்தமும் சமாதானமும் அமைய வேண்டும் என்று வாழ்த்துகின்றார்கள்.

ஜோ. எகட்டன்
செனித்மார்கட்டிங் அன்ட் அட் வடைசிங்
சிஸ்டம்ஸ் (PVT) LTD
17/3 சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.

(கி-3104)

# இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் பலன்

# எண்சோதிட நோக்கில் எவ்வாறு அமையும்?

மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் எத்துறைசார்ந்தோர்க்கும் எண்களின் புழக்கம் தவிர்க்கமுடியாததொன்றாகும். ஒன்று முதல் பத்து வரையான எண்கள். தம் அடுக்குகளினாலும். தனித்துவத்தினாலும் பல்வேறுபட்ட நன்மைகளையோ தீமைகளையோ வாழ்க்கையில் ஏற்படுத்தக்கூடிய சக்தி மிக்கனவாக விளங்குகின்றன.

எதிலும் முதன்மைத்தானம் எனப் பெருமைப் படுத்தப்படும் எண் ஒன்றும் சூனியம், சைபர், வெறுமை எனப்படும் சைபரும் (வட்டமும்) எண் உலகிலே சேர்ந்தும், தனித்தும் அவ்வப்போது தரும், நல்லனவும், பொல்லததுமான தாக்கங்கள் வாழ்க்கையில் எண்களைப் பற்றிச் சிந்திக்கும் போது பெரும் அதிசயங்களாகவே காணப்படுகின்றன.

## 2002 ஆம் ஆண்டு

ஒரு எண்ணின் முன்வரும் சைபர் பலவீனமாகவும். அதேசைபர் எண்ணின் பின் தொடராக வரும்போது பெரும் வல்லமை மிக்கதாகவும் அமைவதை நாம் அன்றாட வாழ்வில் காணக்கூடியதாகவுள்ளது. இந்த எண்கள் மக்களுடைய வாழ்வில் பிறப்பெண்களாகவும், பெயர் எண்களாகவும், செய்காரியங்களில் செயல்படும் எண்களாகவும் தம்முடைய குணாதிசயங்களால் பல்வேறு மாறுபாடுகளை ஏற்படுத்துகின்றன.

இவ்விதம் நோக்குமிடத்து பலரும் இப் புத்தாண்டாகிய இரண்டாயிரத்து இரண்டாம் 2002) ஆண்டு எண் சோதிட ரீதியாக எப்படி அமையும் என்பது பற்றிநோக்குமிடத்து இரண்டு, இரண்டெண்களும் நடுமையமாக இரண்டுசைபர்களையும் கொண்டதாக இவ்வாண்டுகாணப்படுகின்றது

முதன்மை எண்ணிற்கு அதாவது, ஒன்றிற்கு அடுத்த சிறப்பிடம் பெறும் இரண்டு எண்களும், சூனியம், வெறுமை, வட்டம் எனப்படும் இருசைபர்களும் இவ்வாண்டை வழி நடத்தப் போவதாக உள்ளன. பொதுவாக இரண்டு எண்களை எண் சோதிடத்தில் கிரகங்களிற் சந்திரனுக்கு உரியதாகவும் பழகுவதற்கு இனிமையும், அமைதியும் உடையதாகவும் தனக்கெனத் தனித்துவமான செயற்பாடும், நன்மையும், தீமையும் மாறி மாறி வரும் இயல்பும் உடையதாகவும் வகுத்துக் கூறுவார்கள.

## இரண்டின் ஆதிக்கம்

எண் இரண்டின் ஆதிக்கம் சந்தேகம், பிடிவாதம், பேசுவதற்குப் பழகுவதற்குத் தனித்தன்மை, கலை, இயற்கை யழகுகளிலும் இலக்கியத் துறைகளில் ஆர்வமும் உடையவர்களிடம் அதிகம் காணப்படுவதாயுள்ளது. ஒன்று எண் சூரியனாகவும், இரண்டு எண் சந்திரனாகவும் விளங்குவதிலிருந்து எண் ஒன்றிலும் பார்க்க, எண் இரண்டு சாந்தமும், குளிர்மையும் உடையதென்பது புலனாகின்றது.

இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டைப்பற்றியும். எங்கள் நாட்டைப்பற்றியும். சிந்திப்போமாயின், ஸ்ரீலங்கா எனும்பெயர் ஒன்பது எண் ஆதிக்கத்திற்பெரும் போராட்டத்திற் சிக்கி இருப்பதனால், இரண்டாம் எண் ஆதிக்கம் எக்காரியங்களையும் சந்தேகத்துடனும், மென்மையாகவும், நடந்து. லட்சியப் பிடிப்புடனும், சில பிடிவாதமான மனச்செயற்பாட்டுடனும் வழிநடத்தவேண்டிய கட்டாய நிலையில் அரசு இருக்கும் என்பது தெளிவாகும்.

இருஇரண்டெண்களும். இருசைபர்களும் சந்தேகத்தையும நிலையற்ற தன்மையையும் தந்துஇடையில்பலசந்தர்ப்பங்களிலும் வெறுமையும் ஏமாற்றமும்தருவதாகஇவ்வாண்டில் நாட்டு நிலைகாணப்பட்டாலும், மக்களுக்கு ஒருவித

## நீர்வை மணி

அமைதியும், அச்சமில்லாத நிலையும்தென்படும். 2, 11 20, 29 ஆம் திகதிகளிற் பிறந்தவர்களும் கூட்டு எண் இரண்டாக வருபவர்களும் 2ன் ஆதிக்கம் உடையவர்களாயிருப்பார்கள்.

## கூட்டு எண் 4

இந்த ஆண்டின் கூட்டுஎண் 4 ஆக அமைவது ராகு கிரகத்தின் ஆதிக்கத்தைக்குறிக்கும். 2 சந்திரனாகவும், கூட்டு எண் 4 ராகுவாகவும் வருவதனால் 2 எண்ணால் ஏற்படக்கூடிய நல்லவிளைவுகளை ராகு இடையூறு செய்யும் நிலை தொடரும். எனினும் சந்திரனின் சிறப்பு பூரணமான நன்மையை தராவிடினும் ஓரளவாயினும்நன்மையளிக்கும். 4, 13, 22, 31ஆம் திகதிகளிற் பிறந்தோரும் கூட்டு எண் நான்காகவருபவர்களும், எண் நான்கின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாவார்கள், ஆகவே இவ்வருடம் 2 எண்காரர்களும், 4 எண்காரர்களும் பலவேறுமுக்கிய மான மாற்றங்களையும், நன்மை தீமைகலந்த பலவிதமான குடும்பவாழ்க்கைச் சம்பவங்களையும் எதிர்கொள்ள வாய்ப்புண்டாகும்.

எண் 2, 11, 22, 29 எண்காரரும்: கூட்டுஎண் 2 ஆக உடையவர்களும் பெருமளவான நன்மைகளையும் சிறப்புக்களையும் பெறவும். 4, 13, 22, 31 எண்காரரும். கூட்டுஎண் 4ஆக உடையவர் வர்களும் பிடிவாதத்தாலும், தவறானசெயற்பாடுகளாலும் சிரமங்கள் பலவற்றைஅனுபவிக்கவும் இவ்வாண்டில் எண்களின் செயற்பாடுகள் அமைவதாயுள்ளன.

## வேறுஎண்கள்

2002 ஆம் ஆண்டில் பொதுவாக 3, 6, 9, எண்காரர்கட்கும் சுமாரான நன்மைகள் ஏற்படலாகும். 1, 5, எண்காரர்கள் பெரும்பாதிப்புக்கள் ஏதுமின்றி நன்மைகளுடன் திருப்தியாயிருப்பார்கள். எண்சோதிடப்படி தமக்குச் சாதகமான எண்களைக் கவனத்திற் கொண்டு முக்கிய கருமங்களைச் செய்வதனாற் பல்வேறு நன்மைகளையும் பெறவாய்ப்புண்டாகும்.

நாளாந்த. வாழ்க்கையில் எமக்குச் சாதக பாதகமான எண்களைத் தெரிந்து கருமங்களை ஆற்றுவதன் மூலம் பல்வேறு இடையூறுகளிலிருந்தும் விலகி நல்வாழ்வுகாண வாய்ப்புண்டாகும். □

ஐ. தே. முன்னணி முன்வைத்துள்ள

# சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க பொ. ஐ. மு. சிரேஷ்ட தலைவர்கள் விருப்பம்

## எனினும் ஜனாதிபதியின் உத்தரவின்மையால் தயக்கம்

(கொழும்பு)

ஐ.தே.முன்னணி அரசு முன்வைத்துள்ள சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க பொ.ஐ முன்னணியின் சிரேஷ்ட தலைவர்கள் குழுவொன்று விருப்பம் கொண்டுள்ள போதிலும்,

ஜனாதிபதிகுமாரதுங்காவின் தீர்மானத்தை எதிர்பார்த்து காத்திருப்பதாக தெரிய வருகிறது

சமாதான முயற்சிகளுக்கு கை கொடுத்து உதவுவது எதிர்க்கட்சியின்கடமை என்ற கருத்தைக் கொண்டுள்ள ஏ.எச் எம் பௌசி தலைமையிலான இக்குழு, தமது தலைமையை இதற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் இணங்கச் செய்யும் முயற்சிகளை எடுத்து வருவதாகவும் 'ஒப்சேவர்' பத்திரிகைசெய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, சமாதானத் திற்கான நல்வாய்ப்புக்கள் நெருங்கிவரும்போது பொறுப்பற்ற முறையில்நடந்துகொள்ளக்கூடாது என்ற கருத்து முன்னாள் பிரதமர்ரட்ணசிறி விக்கிரமநாயக்க உட்பட பல சிரேஷ்ட தலைவர்களிடம் நிலவுவதாகவும் பொ ஐ.மு. வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# இலவச மருத்துவசிகிச்சை வாராந்தம் 100பேர் பயன்

சாவல்கட்டு சனசமூகநிலையத்தில்வைதித்து, தென்னிந்திய திருச்சபையினரால்செவ்வாய்தோறும் இலவச மருத்துவசிகிச்சை வழங்கப்படுகிறது.

காலை 9 மணி தொடக்கம் மதியம்வரை இடம்பெறும் இவ் இலவச மருத்துவ சிகிச்சையினால் வாராந்தம் 100 பேர் பயன்பெறுவது கண்டறியப்பட்டுள்ளது. (உ-201)

பரு. வைத்தியசாலையில்

# செங்கண்மாரி நோய்க்கு சிகிச்சை வசதியில்லை

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் செங்கண்மாரி நோய்க்கு சிகிச்சையளிப்பதற்கேற்ற வசதிகள் இல்லை எனத் தெரிய வந்துள்ளது.

இதன் காரணமாக மேற்படி நோயினால் பாதிக்கப்பட்ட புலோலிப்பகுதியைச் சேர்ந்த இரு குழந்தைகள் யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும்கூறப்படுகிறது (உ-23)

# உள்ளூராட்சி தேர்தலுக்கு முன் உறுப்பினர் கைது

(கொழும்பு)

எமது கட்சியின் பொறுப்பு வாய்ந்த உறுப்பினர்களை அரசாங்கம் கைது செய்து உள்ளூராட்சித் தேர்தல்களில் நாம் பெறக்கூடிய வெற்றி வாய்ப்புக்களைக் குறைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது; என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உபதலைவர்களில் ஒருவரான மஹிந்த ராஜபக்ஷ செய்தியாளர் மகாநாட்டில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

எமது கட்சியைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்களும் பிரதேசசபை உறுப்பினர்களும் கைது செய்யபபட்டுள்ளனர்.

ஜனநாயகத்தைக் காப்பதற்குஉறுதி பூண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் ஜனநாயகத்திற்கு முரணாக நடக்கின்றார்கள என்பதற்கு இது சான்றாகும் என்று தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் எமது கட்சி எல்லா உள்ளூராட்சிசபைகளுக்கும் போட்டியிடும். பெண்களுக்கும் இளைஞர்களுக்கும்அத தேர்தலில் போட்டியிடநாம்அதிகவாய்பளிக்கவுள்ளோம் என்று மேலும் பேசுகையில் அவர் தெரிவித்தார். (எ)

# பகல் நேர மீன்பிடித் தடை நீக்கப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவியில் பகலில் மீன்பிடிப்பதற்கான தடையை பாதுகாப்புபடைகள் நேற்றுமுதல் நீக்கியுள்ளன

மாவட்ட பாதுகாப்பு சிரேஷ்ட அதிகாரி இதனைத் தெரிவித்துள்ளார்

புதிய நடைமுறையின் படி காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை மீன்பிடிக்கமுடியும் எனவும் அத்தோடு முன்னர் அறிவிக்கப்பட்டது போலவே இரவு நேர மீன்பிடித்தடை அமுலில் இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். [உ-8)

# விரைந்து நடவடிக்கை

(மந்திகை)

யாழ். குடாநாட்டில் பரவலாக நிலவிவரும் திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பும் வகையில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நீதித்துறை வட்டாரங்கள தெரிவித்துள்ளன. (உ-23)

# ரதபவனி

(யாழ்ப்பாணம்)

சபரிமலைஸ்ரீசாஸ்தாபீடம் நடத்தும், ஐயபபசாமி மகரஜோதி புதிய ரதபவனிப் பெருவிழா, நாளை புதன் கிழமைபி.ப4.00மணி முதல் ஆடம்பெறவுளளது.

இலங்கைஇந்துமதகுருபீடாதிபதி சிவாகமஞானி கலாநிதி அருணஜோதி ஸகந்த சாம்ப சிவ சிவாச்சாரியார் அருளாசியுடன், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமலைக் குருமணி கலாநிதி ஸ்ரீஐயப்ப தாஸன் சாமபசிவ சிவாச்சாரியார் தலைமையில் இவ் ரதபவனி நடை பெறவுளளது, (உ)

## இனிய புத்தாண்டில்...

15ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் அன்னை தந்தையர் பட்ட கஷ்டங்களையும எமது வாழ்விலே நிதர்சன மாக்கியுள்ளது. இடம் பெயர்வும் அகதி வாழ்வும் ஆண்டவன் இயேசு பட்ட துன்பங்களிலே அவரது பெற்றோரை மனக் குழப்பமும் வேதனையும் அடையவைத்தது.

மாசற்ற குழந்தைகள் கொல்லப்பட்ட' கொடூர நிலை கல்மனம படைத்தவர்களின் இரக்கமற்ற செயலால் கருவறைகளிலும, வாழ்விடங்களிலும அழிக்கப்பட்டு அவ்வுயிர்களின் ஓலம் எம்மைத் துன்பத்துக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கின்றது. காட்டிக்கொடுப்புக்களும், கொலை கொள்ளைகளும இரக்கமற்ற அரக்கத் தனத்தை வெளிப்படுத்துகின்றன. இவற்றுக்கு மத்தியிலும சமாதான விரும்பிகளான மக்கள் மனங்கள் இல்லாமலில்லை. அவர்களின் நற் செயற்பாடுகளும், போற்றுதல் புகழ்ச்சிகளும் இறைவனின் கோபாக்கினையில் இருந்து எம்மைத் தப்புவித்துக் கொண்டிருக்கின்றன;

### மனச்சாட்சிக்கு மதிப்பளிப்போம்

எனவே நாம் கற்றுக் கொண்ட பாடங்களையும் பெற்றுக் கொண்ட அனுபவங்களையும் காற்றிலே பறக்க விடக்கூடாது. காலத்தின் அருங்குறிகளை நாம் கண்டு கொளள வேண்டும். கடவுளின் குரலானமனச்சாட்சிக்கு நாம கட்டுப்பட வேண்டும். நன்மை செய்யக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும்;

சமகால நிகழ்வுகள்கிறிஸ்துவின் ஒளியிலே எம்மைவழி நடத்த நாம் மற்றவர்களை நேசிக்கக் கற்றுக் கொளள வேண்டும். துயருறுவோருக்கு ஆறுதல் அளிக்கும மனப்பக்குவம எம்மில் வளர்க்கப் பட வேண்டும். இவ்வாறு செயற்பட நாம் முன்வருவோமானால் கிறிஸ்துவின் பிறப்பு, துன்பத்திலும மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாக மாறறியது போல சமகால நிகழ்வுகள் எமக்கு வேதனை, துன்பங்கள், இழப்புகள், ஏமாற்றங்களைத் தந்தாலும் இறைவார்த்தையில் நாம கட்டியெழுப்பும் வாழ்வானது துன்பத்திலும்எமக்கு மகிழ்ச்சியூட்டும் வாழ்வாக மலர்ந்து வரும். எனவே இப் புனித புத்தாண்டில் எமது வாழ்வை இறைவழிக்குத் திருப்பி இனிய வாழ திட சங்கற்பம் கொள்வோமாக!

## இன்று ஒரு தகவல்

### எந்த ஊரும் நல்ல ஊரே!

வெளியூரிலிருந்து பிழைப்புத் தேடி புதிய அந்த ஊருக்கு இளைஞன் ஒருவன் வந்தான் "அந்த ஊர் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அங்கிருந்த பெரியவர் ஒருவரிடம் "ஐயா! நீங்கள் இந்த ஊரிலேயே பிறந்து வளர்ந்தவர் என்றும் நினைக்கின்றேன், உங்கள் அனுபவத்தை வைத்துச் சொல்லுங்கள். இந்த ஊர் நல்ல ஊர்தானா? நான் இங்கேயே தங்கிவிடலாமா? என்று கேட்டான்.

அவனை மேலும் கீழும் பார்த்த பெரியவர் "உன் வாயும், கையும் ஒழுங்காக இருந்தால் எந்த ஊரும் நல்ல ஊர்தான்" என்று பதில் சொன்னார், "ஐயா! நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே" என்று கேட்டான் இளைஞன்.

அதற்குப பெரியவர் 'வாய் கடுஞ் சொற்களைப் பேசாமல் இனிய சொற்களையே எப்பொழுதும் பேசுமானால், கை திருடாமல் உண்மையாக உழைக்குமானால் எந்த ஊரும் நல்ல ஊர்தான், அப்படி நடக்க இயலாதவர்க்கு எல்லா ஊரும் கெட்ட ஊர்தான்' என்று விளக்கம் தந்தார்.

பேராசிரியர் எ. சோதி

## தமிழரசுக் கட்சிக்கு புத்துயிர் கொடுக்க ஆதரவாளர் பிரயத்தனம்

(தென்மராட்சி)

இலங்கை அரசியல் வரலாற்றில் பழமைவாய்ந்த அரசியல் கட்சியாக இருக்கும் இலங்கை தமிழரசுக் கட்சியைப் புனரமைப்புச்செய்து இயங்கச் செய்வதற்கான ஆரம்ப முயற்சிகளை சில தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் தற்போது செய்துவருகின்றனர்என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயற்பாடுகள் மற்றும் நிர்வாகத்தில் அதிருப்தியடைந்தநிலையில் இருக்கின்ற ஆரம்பகால தமிழரசுக் கட்சியின உறுப்பினர்களே தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அக்கட்சிக்குப் புத்துயிர் கொடுப்பதைத்தவிர வேறுவழிகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லைஎனக் கூறிவருகின்றனர்.

இதேவேளை, இலங்கை தமிழரசுக்கட்சிக்குப் புத்துயிர்கொடுக்கும் முயற்சிக்கு நல்ல ஆதரவு ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

இது இவ்விதம்இருக்க. தமிழரசுக்கட்சியின் பணிகளை முன்னெடுப்பது தொடர்பான விடயங்களை ஆழமாக ஆராய உதவியாக விரைவில் ஓர் ஆலோசனைக்கூட்டம் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகவும்தெரிய வருகின்றது. (உ-77)

## தென்மராட்சி பாடசாலைகளை உரிய இடத்தில் இயக்க முயற்சி

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்திருக்கும் குடும்பங்கள் மீளவும் அங்கு குடியேறத் தற்போது நாட்டம் காட்டி வருவதால், சில பாடசாலைகளை அங்கு இயங்கச் செய்வதற்கான முன் முயற்சிகளை வலயக் கல்விப்பணிப்பாளர் மேற் கொண்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இதன்அடிப்படையில்கொடிகாமம்திருநாவுக்கரசுமகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம், கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், அல்லாரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மிருசுவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆகியன விரைவில் அவற்றின் சொந்த இடங்களில் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இப்பாடசாலைகளில் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களையும் அப்பாடசாலைகள் இயங்கவுள்ள அவற்றின் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கவும் ஏறபாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அறியப்படுகின்றது. (உ-77)

## தட்டுப்பாடு தீர்ந்தது

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில், சேலைன்.குளுக்கோஸ்.மற்றும் கட்டுத்துணிக்கு நிலவி வந்த தட்டுப் பாட்டினைப் போக்கும் வகையில் மேற்படி பொருட்கள் ஒருதொகுதிசுகாதாரத திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைவட்டாரங்கள் தெரிவித்தன. (உ 23)

## மாட்டுத் திருடன் மாட்டினான்

(நவக்கிரி)

களவாகப் பிடித்தமாட்டை இறைச்சிக்காக விற்றவர்அச்சுவேலிப் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

ஈவினைப்பகுதியைச்சேர்ந்த மேற்படி நபர்,விசாரணைகளின் போது அப்பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த வேளைஇருமாடுகளைத் தான் களவாகப் பிடித்ததாகவும் ஒன்றை ஏற்கனவே 2ஆயிரத்து 500ரூபாவுக்கு விற்பனை செய்து விட்டதாகவும் ஒப்புக்கொண்டார். (உ-233)

## தேங்காய் திருடியவர் விளக்க மறியலில்

(மந்திகை)

தென்மராட்சிப் பகுதியில் இருந்து சுமார் 200 தேங்காய்கள் திருடிவந்த ஒருவரை கையும் மெய்யுமாகப் பிடித்து கொடிகாமம் பொலிஸார் கடந்த வெள்ளியன்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்த போது.

எதிர்வரும் 10 ஆம் திகதி வரைவிளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ-23)

## இறந்து மிதக்கும் மாடுகள்

(நவக்கிரி)

அச்சுவேலிவல்லை கடல்நீரேரிப் பகுதியில் மாடுகள் இறந்து மிதப்பதாக அப்பகுதிக்கு மீன் பிடிக்கச் செல்வோர் தெரிவிக்கின்றனர்.

மேய்ச்சலுக்காகச் சென்ற மாடுகளே கடும் மழை காரணமாக இறந்து இவ்வாறு கடலில் மிதப்பதாகக் கூறப்படுகின்றது. (உ-233)

## வீதியில் இறந்து கிடக்கும் நாய்கள்

(நவக்கிரி)

பிரதான வீதிகள் பலவற்றிலும் செத்த நாய்கள் அகற்றப்படாதிருப்பதாக பொது மக்களால் புகார் தெரிவிக்கப் படுகிறது.

நாய்கள் அதிகரித்துள்ளதால் அவை வீதிகளில் வாகனங்களுடன் மோதுண்டு அவ்விடங்களிலேயே இறந்து காணப்படுவதாகவும்,

இதனால் மிகுந்த சுகாதாரச் சீர்கேடான நிலை ஏற்படும் வாய்ப்பேற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-233)

## 15 வீடுகள் அமைப்பு திட்டம் விரைவில் பூர்த்தி

(ஆனைக்கோட்டை)

சாவக்கட்டு பகுதியில் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள விதவைகளுக்கான வீடமைப்புத்திட்டம் 95 வீதம் பூர்த்தியாகிவிட்டதாகவும், இம் மாதம் முதல் உரியவர்கள் குடியிருக்கமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கணவரைஇழநத சொந்தக்காணியுடைய 15 விதவைகளுக்கு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம், றான் ஆகியன வழங்கிய நிதியுதவிமூலம் இவ் வீட்டுத்திட்டம் அமுல் படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (உ-201)

## சிறந்த கால்நடை பண்ணையாளராக தீவகப் பகுதியில் இருந்து எவரும் தெரிவாகவில்லை

(ஊர்காவற்றுறை)

அண்மையில் இடம்பெற்ற யாழ். மாவட்ட சிறந்த கால்நடைப் பண்ணையாளர்கள் தெரிவில், தீவகப் பகுதி புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதிக் கால்நடைப் பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களில் இருந்து சிறந்த கால்நடைப பண்ணையாளர்கள பலர் இப்போட்டியில் கலந்து கொண்ட போதிலும் ஒருவர் கூடத் தெரிவு செய்யப்படாமை குறித்து பலராலும் கவலை வெளியிடப்பட்டுள்ளது. (உ-75)

## தீவுப்பகுதிப் படகுச்சேவை ஞாயிற்றுக் கிழமையும் நடத்தக் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைநடத்தும தீவுப் பகுதிகளுக்கிடையேயான படகுச்சேவை ஞாயிற்றுக்கிழமைகளிலும் இடம்பெறவேண்டுமென அபபகுதிப் பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனலைதீவு,எழுவைதீவு; நயினாதீவு,ஆகியவற்றிற்கிடையிலானபடகுச் சேவை தற்போது ஞாயிறு தவிர்ந்த ஏனைய 6 தினங்களில் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ-75)

## புலிகளின் தடையை நீக்க இந்தியா சம்மதிக்காது

### திலக் கருணாரத்தின தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் விடுதலைப் புலிகளின் தடையை நீக்குமாயின் இதற்கு இந்திய அரசாங்கம் ஒருபோதும் சம்மதம் தெரிவிக்கமாட்டாதென சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படுவதை சிஹல உறுமய விரும்பவில்லை, இந்தியாவின் நிலைப்பாடும் இதுவேயாகும்.

புலிகள் மீதான தடை பேச்சுவார்த்தைக்கு ஒரு போதும் தடையாக இருக்க மாட்டாது எனவே முதலில் திறந்த மனதுடன் பேச்சுக்களை அரசாங்கமும் புலிகளும் ஆரம்பிக்கட்டும்.

இலங்கைப் பிரச்சினையில் நோர்வே தலையிடுவதை இந்தியா ஏற்காது. எமது நாட்டின் பிரச்சினையை நாம் தீர்க்க வேண்டும். ஆனால், அயல்நாடான இந்தியா தலையிடுவதில் எமது கட்சிக்கு ஆட்சேபனை இல்லையெனவும் திலக் கருணாரத்தின மேலும் தெரிவித்துள்ளார். [ந- 4]

## குருநகர் சென். ஜேம்ஸ் ஆலய நிர்வாக சபை அரச அதிபருக்கு கடிதம்

(தென்மராட்சி)

குருநகர் சென். ஜேம்ஸ் ஆலயத்திற்கு அருகில் இருக்கும் வெற்றுக் காணியை ஆலயத்தின் ஆத்மீக நலனுக்காக வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் இருந்து விலையாகப் பெற்றுக் கொள்ள உதவி புரியுமாறு மேற்படி ஆலய நிர்வாகசபை யாழ். அரச அதிபருக்கு கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆலயத்தின் பங்குத்தந்தையும் தலைவருமான அருள்திரு ஏ. எவ். ஜெயசேகரம் அடிகளும், செயலாளர் அ. கிளிபேடார் சியஸ்சும் கையொப்பமிட்டு அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

வெற்றுக் காணியைப் பெற்றுக் கொள்வதற்கு பங்கு மக்களின் கையொப்பங்களைத் திரட்டி மகஜர் ஒன்றினை விரைவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் சமாச இயக்குநர் சபைக்கும் அனுப்புவது என பங்குத்தந்தை தலைமையில் கூடிய பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக்காணி சம்பந்தமாக 1989 ஆம் ஆண்டு பங்குத்தந்தையாக இருந்த அருட்திரு. யேம்ஸ் பத்தி நாதரின் போக்கை அமுல்படுத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-77)

## இளைஞன் கடத்தப்பட்டார்

திருமலை தோப்பூர் பகுதியில் இளைஞன் ஒருவன் இனம் தெரியாத ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டதாக பாதுகாப்பமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கபபட்டுள்ளது.

தோப்பூரைச் சேர்ந்த சலீம் (வயது-35) என்ற இளைஞரே கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சுருக்கெழுத்தாளர் நியமனம் 11 பேருக்கு

(தென்மராட்சி)

கடந்த ஆண்டு முற்பகுதியில் நடைபெற்ற வடக்கு-கிழக்கு மாகாண சேவையின் தமிழ் சுருக்கெழுத்தாளர் தரம்2இற்கு ஆட் சேர்ப்புச் செய்வதற்காகநடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், கடந்த ஒக்ரோபர் மாதம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் இருந்து,

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின்உறுப்பினர்கள் 11பேருக்கு யாழ்.கல்வி வலயத்தில் இம்மாத நடுப் பகுதியில்இருந்துநியமனங்கள்வழங்கப்பட்டுள்ளன.

நியமனம் வழங்கப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு:

ப சுமதி(கரணவாய்):சிறிசிவந்தினி(தம்பசிட்டி),க.வீணா (கரவெட்டி),த.சுதா ஜினி (உடுப்பிட்டிவடக்கு)ஐ கௌரி (கரவெட்டிகிழக்கு),பு ரமேஸ்வரன்(உடுப்பிட்டி),இ. ராஜினி(கொம்மாந்துறை), ஆ.ரஜனி(சுப்பர்மடம், பருத்தித்துறை)ஜெ.பிரேமினி(அல்வாய்)தெ சுகுணா [இமையாணன்]சோ,தமயந்தி [பொலிகண்டி]. (உ.77)

## சிந்தனைக்கு விருந்து

### வாக்குறுதிப் பட்டத்தின் கதி?

காற்றடித்தால் அத்திசையில் பட்டம் கிளம்பிஎழும்
காற்றோய வீச்சாய்த் தரைசேரும் – ஏற்றமுடன்
தேர்தற்காற் றேற்றிவிட்ட வாக்குறுதிப் பட்டமினிச்
சார்வதுமே லோகீழோ சாற்று.

·பழையவன்

## யாழ். மாநகர சபையால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களைவிரைந்து முன்னெடுக்க பிரதி மேயர் கந்தையன் உறுதி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகள் எந்நேரமும் கலைக்கப்படலாம் என்பதால் யாழ் மாநகர சபையால் 2001ல் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை விரைந்து முன்னெடுக்கவுள்ளதாக யாழ் மாநகர சபையின்பிரதிமேயர் செ. கந்தையன்தெரிவித்தார்.

யாழ். மாநகரசபையின் மேயராகத் தெரிவான என். ரவிராஜ், பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானதை யடுத்து, நேற்றைய தினம் மாதாந்தக் கூட்டம் யாழ். பிரதி மேயர் தலைமையில் முதன் முறையாகக் கூடிய போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகை யில், 2001 ஆம்ஆண்டுயாழ்: மாநகரசபையில் பெரும் நிதி நெருக்கடி நிலவியதாகவும் இனிமேல் அந்நிலை தொடராது எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து, நேற்றையதினம் சபையில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

- கொட்டடி மீன்சந்தை16 லட்சம் ரூபாவிற்கும் பெரிய கடை மரக்கறி சந்தை 3லட்சத்தி 25 ஆயிரம் ரூபாவும் கேள்வி அறிவித்தல் மூலம் வழங்குவது,
- கொட்டடி மீன்சந்தையினை உடனடியாக பண்ணைப் பகுதிக்கு மாற்றுவது சாத்தியம் இல்லைஎன்பதால் எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் மாற்றுவது.
- சென்ற ஆண்டு கேள்வி அறிவித்தல் மூலம் கடைகள் சந்தைகள் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு இடங்கள் போன்றவற்றின் உரிமையைப் பெற்று கேள்வி அறிவித்தல் நிதியினை கட்டாதவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுத்தல்.
- வேலைப் பகுதியில் மேலதிமாக உள்ள 84 ஊழியர்களுக்கு சுழற்சி முறையில் வேலை வாய்ப்பு வழங்குதல்.
- பொன்விழா கொண்டாட்டங்களை போட்டிகள் மலர்வெளியீடு என்பவற்றுடன் நடத்துதல். (உ-10,9)

## வசந்தம் தர வா புதுவருடமே!

அகிலம் எல்லாம் அன்பு பெருகட்டும்
அறிவுடன் பகுத்தறிவும் வளரட்டும்
ஆண்டவன் நம்பிக்கை அவனியை ஆளட்டும்
அவன் அருளாலே ஆனந்தம் அமையட்டும்
அணுவில் கூட அவனே ஆடட்டும்
ஆயுதங்கள் எல்லாம் அவனால் ஓயட்டும்
பேர், புகழ்: பெருவாழ்வு அவனே தரட்டும்
அவன் நாமம் எங்கள் ஆன்மாவைத் தொடட்டும்
உடல். பொருள், ஆவி எல்லாம் அவனே ஆகட்டும்
உலகம் எங்கும் ஆன்மீக வெள்ளம் பாயட்டும்
நடந்தவையாவும் நடந்தவை ஆகட்டும்
புத்தாண்டில் நடப்பவை யாவும் நல்லவை ஆகட்டும்
பூமியே உன்னை படைத்தவனை நினை
நினைத்தால் ஓடுமே முன்வினை இல்லை இனி தீவினை
நெஞ்சமே இறைவன் சந்நிதியை நினை
உலக ஆசைகட்கு போடு அணை
இத்தனையும் இவ்வையகத்திற்காக,
வசந்தம் தர வா புது வருடமே வா!

இளையகவி
காரை. S. ஆதவன்.

## விபத்தில் சிக்கியவர் அறிவிழந்த நிலையில் ஆஸ்பத்திரியில்அனுமதி

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் காலை அச்சுவேலிப்பகுதியில் இடம்பெற்ற பஸ்-சைக்கிள் விபத்தில் சிக்கியஒருவர் அறிவிழந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறுப்பிட்டி நீர்வேலியைச் சேர்ந்த ஐயாத்துரை கனகசபாபதி (வயது50)என்பவரே விபத்தில் சிக்கியவராவார்.

விபத்துக்குள்ளான வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் அச்சுவேலி பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (உ-104)

## உள்ளகப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

நாளை ஆரம்பமாகவுள்ள தேசிய கல்வியியற்கல்லூரியில் இரண்டுவருடங்கள் பயிற்சியைப்பூர்த்திசெய்தோர் இம்மாதம்7ம்திகதியாழ்மாவட்ட பாடசாலைகளில் ஒருவருட உள்ளகப்பயிற்சிக்காகச்செல்லவுள்ளனர்.

இக்கல்லூரி 2000ம்ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்ற அடிப்படையில் மேற்படி மாணவர்களே முதன்முறையாக உள்ளகப்பயிற்சிக்காக பாடசாலைகளுக்குச் செல்லவுள்ளனர் என்பதுகுறிப்பிடத்தக்கது. [எ-9]

## ஐ. தே. கட்சியின் 47வது சம்மேளனக் கூட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் 47-வது சம்மேளனக் கூட்டம் இம்மாதம் 12ம்திகதிகொழும்பில் நடைபெறவுள்ளது.

கொழும்பு மாநகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ள இச்சம்மேளனக் கூட்டத்திற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமை வகிப்பார்.

இக்கூட்டத்தில் ஆயிரக்கணக்கான ஐக்கிய தேசியக் கட்சிப்பிரமுகர்களும் ஆதரவாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஐக்கியதேசியக்கட்சி ஆட்சி அமைத்தபின் இடம் பெறும் முதலாவதுமாபெரும்கூட்டம் இதுவாகும். (வ)

## கலைஞானியின் மறைவிற்கு ஈ. பி. ஆர்.எல்.எவ் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

கலைஞானி அ. செல்வரத்தினம் அவர்கள் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக வரலாற்று அரும்பொருட்களை சேகரித்து வந்தவர். என்று எண்ணும்போது பெரு வியப்பு ஏற்படுகிறது.

வரலாற்று உணர்வு மங்கிவிட்ட சமூகத்தில் கலைஞானி போன்றவர்கள் எத்தகைய சவால்களை எதிர்நோக்கியிருப்பார்கள் என்பதனை நாம் ஊகித்து உணர முடியும். அந்த வகையில் கலைஞானி அவர்களின் சாதனை தனிமனிதனின் இமாலய சாதனை என்று குறிப்பிட முடியும்.

மாமனிதர் கலைஞானியின் இழப்பு குறித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் யாழ் மாநகர சபை உறுப்பினர் த. சுபத்திரன் விடுத்துள்ள இரங்கற் செய்தியில்இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் யுத்தமும் இடப்பெயர்வும் வாழ்வாகிப்போன சமூகத்தில் வரலாற்று அரும்பொருட்களை சேகரித்தல்என்பது மிகப்பெறுமானம் உடைய விடயம்

அவருடைய சேகரிப்புக்கள் முறையாகப் பாதுகாக்கப்பட்டு எமது வருங்கால சந்ததிகளுக்கு வழங்குவதே எமது உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும். என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)

கடந்த 22ம்திகதி வெளிநாடுபயணமான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது உத்தியோக பூர்வவிஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று நாடுதிரும்பியுள்ளார். (உ-8)

## விமான பயணச்சீட்டில் தரகர்கள் தொல்லை

### பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதம்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள்மீண்டும் தரகர்தொல்லைக்கு ஆளாகி பணத்தை விரயம்செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்றுகொழும்பு மாவட்டத்தில் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட செல்லையா பத்மநாதன் பாதுகாப்பு அமைச்சிற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

யுத்தநிறுத்தம், மோதல் தவிர்ப்புஆகியவற்றை அரசும் விடுதலைப்புலிகளும் கடைப்பிடிப்பதால் வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணத்தில் உள்ளதமது உறவினர்களை பார்ப்பதற்கு கொழும்பு வந்துள்ளதமிழர்களே இத்தகைய தரகர்களின் கெடுபிடிக்கு ஆளாகின்றனர்.

இத்தகைய நிலையைத் தடுக்க கற்பகத்தில் உள்ள ஹெலிருர்ஸ் விமானரிக்கற் வழங்கும் அலுவலகத்தை பிறிதோர் இடத்திற்கு மாற்றுமாறும் அக்கடிதத்தில் செல்லையா பத்மநாதன் கேட்டுள்ளார். [வ]

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் பொதுக் கூட்டம் நாளை பி.ப3.30 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்படவுள்ளது. (உ-2)

## இலங்கைக்கான புதிய இந்திய தூதுவர் பெப்ரவரியில் நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவராக நிருபம் சென் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நியமிக்கப்படவிருப்பதாக தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர் இந்திய அமைதிகாப்புப் படை இலங்கையில் இருந்த காலத்தில் அப்போது தூதுவராகஇருந்த ஜே. என் டிக்சிற்றின் உதவியாளராக இருந்தவரென்று தெரியவருகிறது

இப்போதுள்ள தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்திமாற்றலாகி லண்டன்செல்லவுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தூதரத்தின் பிரதித் தூதுவராக பணிபுரிந்த நிரிபாதி மாற்றம்பெற்று செல்ல அவரிடத்திற்கு இப்போது மோகன் குமார் என்பவர் பதவியேற்றிருப்பது குறிப்பிடத்தக்கது (உ)

## வடக்குக் கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடததப்படமாட்டாது

(கொழும்பு)

இவ் வருடம் பெப்ரவரி மாதம் நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறஉள்ள போதும் வடக்குக்கிழக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் சில மாதங்களுக்குத் தள்ளிப் போட அரசு தீர்மானித்து இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

யுத்தநிறுத்தம், மோதல் தவிர்ப்பு அமுலில் உள்ள நிலையில விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தைக்கு தயாராகி வருவதால் வடக்குக் கிழக்குமாகாணங்களில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவது உகந்ததல்லவென்று அரசுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதை அடுத்தே இத் தேர்தல் பிற் போடப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஏற்கனவே அரசு அறிவித்திருந்தபடி தென்பகுதியில் பெப்ரவரி மாத இறுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்துவதென்றும் அரசு தீர்மானித்துள்ளது. [வ]

## சீருடை-பாடப்புத்தகம் 1ம்தவணைக்குள்கிடைக்கும்

[கொழும்பு]

நாடெங்குமுள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்கு இவ்வாண்டு1ம் தவணைக்குள் இலவசசீருடை, இலவசப் புத்தகங்களை வழங்குவதற்கு கல்விஅமைச்சு ஏற்பாடுகள் செய்துள்ளதாக கல்வித்திணைக்கள உயர் அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடெங்கிலுமுள்ள 10ஆயிரத்து இருநூறுபாடசாலைகளில் கல்விபயிலும்மாணவர்களுக்கு 900மில்லியன்ரூபா பெறுமதியான பத்துமில்லியன்மீற்றர் சீருடையும்900 மில்லியன் ரூபாபெறுமதியான இலவசபுத்தகங்களும் வழங்கப்படவுள்ளன.

இலவசசீருடை, புத்தக விநியோகத்தின் போது கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் இடம்பெறாத வகையில் சீருடை மற்றும் பாடப்புத்தகங்கள் கிடைக்காத மாணவர்கள் அவ்வப்பகுதி கல்வித்திணைக்கள அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யலாம் என்றும் அந்தஅதிகாரி தெரிவித்துளளார். (வ)

## சபாநாயகர் சந்திப்பார்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியற்கட்சித் தலைவர்களை பாராளுமன்ற சபாநாயகர் ஜோசப்மைக்கல்பெரேரா இன்றுசந்தித்துப்பேச்சுநடத்தவுள்ளார்.

இம்மாதம் 8ம் திகதி பாராளுமன்றம் கூடவிருப்பதால் அன்றையதினக் கூட்டத்தில் எடுக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக கட்சித்தலைவர்களுடன் இக்கூட்டத்தில் சபாநாயகர் ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [வ)

## கடந்த செப்ரெம்பரில் அதிகூடியமழைவீழ்ச்சியும் வெப்பமும் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில்கடந்த வருடம் செப்ரெம்பர்மாதத்திலேயே அதிகூடிய மழைவீழ்ச்சியும் அதிகூடிய வெப்ப நிலையும் பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி விவசாய மண்டலஆராய்ச்சி திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிகூடிய மழைவீழ்ச்சியாக செப்ரெம்பர் 25ம் திகதி 216.1 மில்லிமீற்றரும், அதிகூடிய வெப்ப நிலையாக செப்ரெம்பர் 12 ஆம் திகதி 34.8 பாகை வெப்பநிலையும் பதிவாகியுள்ளது.

கடந்த வருடம் 1939.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-19)

# பட்டாசு தொழிற்சாலைத் தீ விபத்தில் பலியானோர் தொகை 300ஐ தாண்டியது

(லிமா)

பெருநாட்டின் தலைநகரான லிமாவில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பட்டாசுத் தொழிற்சாலை தீவிபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 300ஐயும் தாண்டியுள்ளது

புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்காகநகரில்மக்கள் கூட்டம் அலை மே திக்கொண்டிருந்த போது தொழிற்சாலையில் இருந்து லொறிஒன்றிற்கு பட்டாசுகளை ஏற்றிக் கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

இத்தீ ஏனைய இடங்களுக்கும் பரவத் தொடங்கியதால் இதனுள் அகப்பட்ட பலர் கருகிமாண்டது தெரிந்ததே.

இறந்தவர்களில், 230 இற்கும் அதிகசடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டுஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

180 இற்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்ததுடன் நூற்றுக்கணக்கிலானோர்எரிகாயங்களுக்கும் உள்ளாகியுள்ளநிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தீஅனர்த்தத்தில் சிறுவர்களே அதிகம் உயிரிழந்ததாகவும் இதனால் அந்நகரமெங்கும் சோகமயமாக காட்சியளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக அந்நாட்டின் ஜனாதிபதி அலெக்சாண்டர் ரொலைடோ பாதிப்புற்ற மக்களுக்கு தனது அனுதாபத்தைத் தெரிவித்துளளதுடன் அத்தொழிற்சாலைக்கு அருகிலுள்ள பட்டாசுக்கடைகளில்பட்டாசுகளைவிற்பனை செய்வதை தடைசெய்யும்அவசரஉத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 40 வருடங்களில் அந்நாட்டில்ஏற்பட்ட மிகப்பெரும் தீவிபத்து இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

### பாகிஸ்தான் தொடர்பான

# இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு உலகின் முக்கிய நாடுகள் ஆதரவு

(புதுடில்லி)

உலகநாட்டுத் தலைவர்கள், இந்தியாவின் பாகிஸ்தானுடனான நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்திய எல்லைகளில் அத்துமீறும் தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று உலகத்தலைவர்கள் வற்புறுத்தி வருவதாக இந்தியத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாட்டுத் தலைவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு இந்திய நாடாளுமன்ற தாக்குதல் பற்றி எடுத்துக் கூறியதை யடுத்தே அவர்கள் பாகிஸ்தான் தொடர்பாக மேற்கண்ட கருத்தை கூறியுள்ளனர்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் இதனை தெரிவித்தார்.

கடந்த இரு நாட்களாகபிரதமர் வாஜ்பாயுடன் அமெரிக்க அதிபர், ஜோர்ச் புஷ், பிரான்ஸ் அதிபர், லிபியா அதிபர் ஆகியோர் தொலைபேசியில் உரையாடும்போது இந்தியாவிற்குஆதரவு வழங்குவதாகப் பேசினார்களென்றும் தெரிவித்தார். (து)

# நிலக்கண்ணிப் பயிற்சி 18 இந்தியப்படை பலி

(புதுடில்லி)

இந்தியா ஜெய்ப்பூரில் நிலக்கண்ணி அகற்றும் பயிற்சியின் போது ஏற்பட்ட வெடிவிபத்தில் 18 இந்தியப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்

இந்திய-பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தொடர்ந்து எல்லைப் புறங்களில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு பயிற்சியிலும் ஈடுபட்டு வருகின்ற சமயத்திலேயே இந்த அனர்த்தம் இடம் பெற்றது. (க-2)

### சமாதானத்தை விரும்பும் பாகிஸ்தான்

# அவசியம் ஏற்பட்டால் யுத்தத்தை எதிர்கொள்ளவும் தயாராயிருக்கிறது

## பெர்வேஷ் முஷாரப் இந்தியாவுக்கு சவால்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான், சமாதானத்தையே விரும்புகிறது எனினும், யுத்தமொன்று ஏற்பட்டால் அதனை எதிர்நோக்க வும்தயாராகவிருக்கிறது என அந்நாட்டு ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப் அறிவித்துள்ளார்.

காஷ்மீர் எல்லைப்பகுதியில் இந்திய பாகிஸ்தான் படையினருக்குமிடையே போருக்கு கட்டியம் கூறுமாப்போல பரவலான துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் இடம்பெற்று வருவதைஅடுத்தே பாகிஸ்தான் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

காஷ்மீர் எல்லைப்பகுதியில் நிலவும் பதற்றத்தைத் தணிப்பதற்கு பாகிஸ்தான் சகல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

அதேவேளை, பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா மேற்கொண்டுவரும் இராணுவ மற்றும் இராஜதந்திர நடவடிக்கைகளை நாம உன்னிப்பாக அவதானித்து வருகின்றதுடன், தக்கபதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயாராகவுள்ளோம்.

யுத்தமொன்று வெடிக்கும் சந்தர்ப்பத்தில் பாகிஸ்தான் இராணுவம் மட்டுமல்லாது 140 மில்லியன் மக்களும் அதனை எதிர்கொள்ளத் தயாராக விருப்பதாகவும் முஷாரப் மேலும்தெரிவித்துளளார். (உ-5)

### அத்துமீறி நுழைந்த

# இஸ்ரேலியப் படைகளால் பலஸ்தீனர்சுட்டுக்கொலை

(ஜெருசலேம்)

இஸ்ரேலியப் படையினர், பலஸ்தீனத்தின் காஸாப்பகுதியில் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 பலஸ்தீனர்கள் கொலலப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக இருநாடுகளுக்குமிடையிலான பதற்ற நிலை தணிந்து வருவதாக தெரிவிக்கப்படுகையில் இச்சம்பவம் இடம் பெற்றமை பல தரப்பினரையும் அதிர்ச்சியிலாழ்த்தியுள்ளது.

இஸ்ரேலுக்குள் அத்துமீறி நுழையமுற்பட்ட பலஸ்தீனர்களே சுட்டுக்கொல்லப்பட்டதாக அந்நாட்டு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பலஸ்தீன அதிகாரிகள், பலஸ்தீன பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த இஸ்ரேலிய படையினர் 6 பலஸ்தீனர்களையும் சுட்டுக் கொன்றதாக தெரிவித்துள்ளனர். (உ-5)

# ஆப்கான் இடைக்கால அரசு பாக்.மீது குற்றச்சாட்டு

(இஸ்லாமபாத்)

ஒஸாமா பின்லேடனுக்கு பாகிஸ்தானின் உளவுத்துறை உதவிசெய்து வருவதாக ஆப்கானிஸ்தானின் இடைக்கால அரசின் உள்துறைஅமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பின்லேடன், தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் ஆப்கானிஸ்தானிலும் பாகிஸ்தானிலும இடம்மாறி இருந்து வருகிறார். இந்நிலையில் பின்லேடனின் நடவடிக்கைகளை பாகிஸ்தான் அறியாமல் இருக்கிறது என்று சொல்லமுடியாது

எனினும் பாகிஸ்தான் அவரைக் கைதுசெய்ய எத்தகைய முயற்சியும் எடுக்கவில்லை. உலக பயங்கரவாதப் பட்டியலில் முதலிடத்தை வகிக்கும் பின்லேடனுக்கு பாகிஸ்தான் ஆதரவுஅளித்து வருகின்றது என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறதுஎன்று அவர்மேலும் தெரிவித்துள்ளார். [எ]

### பயங்கரவாதிகளை

# தண்டிக்கும் நடவடிக்கையில் பாகிஸ்தான் ஈடுபாடு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் இயங்கிவரும் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகப்பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இஸ்லாமபாதில் அதிபர் ஜெனரல் பெர்வேஷ் முஷாரப்பின் தலைமையில் இடம்பெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தின் பின், பத்திரிகையாளர் மத்தியில்பேசிய பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துல்சதார்,

பயங்கரவாதிகளுக்குத் தண்டனை வழங்கத் தகுதியான சாட்சியங்களை எதிர்பார்த்து நிற்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, பாகிஸ்தான் மீதான அரசியல்நடவடிக்கைகளை இந்தியா மந்தகதியில் மேற்கொள்ளவேண்டும் என இந்திய எதிர்க்கட்சியின் புதுடில்லி சர்வகட்சியின் கூட்டத்தில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (து)

# பிறேசிலில் கடும்மழை 60-ற்கு மேற்பட்டோர் பலி

[பிறேசிலியா]

பிறேசிலில் கடந்த சிலநாட்களாக பெய்துவரும் கடும் மழையினால் 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகத்தெரிவிக்கபபடுகிறது

கடும் மழை வெள்ளப் பெருக்கு காரணமாக மண் சரிவுகள் ஏற்பட்டதில் அதில் அகப்பட்டு உயிரிழந்தவர்களை மீட்கும் பணியில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த 13 ஆண்டுகளில் இடம் பெற்றமிகவும் மோசமான வெள்ளப் பெருக்கு இதுவென கருதப்படுகிறது. (உ-5)

# ரஷ்ய ஜனாதிபதி வேண்டுகோள்

(மொஸ்கோ)

பாகிஸ்தான் ஆதரவு பெற்ற பயங்கரவாதக் குழுக்கள மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் வேண்டுகோள் விடுத்துளளார்.

அண்மையில் பிரான்ஸ் ஜனாதிபதி ஜேக்சிராக்குடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய போதேஇவ் வேண்டுகோளைஅவர் விடுத்தார். இருதலைவர்களும்மேற்காசிய நிலைமை குறித்தும் ஆராய்ந்தனர். [க-02]

# ஒஸாமா சாகவில்லை புலனாய்வு வட்டாரம் உறுதி

(வாஷிங்டன்)

ஒஸாமா பின்லேடன் இன்னமும் உயிருடன் இருப்பதாக அமெரிக்க புலனாய்வுத்துறையின் செனட் குழுத்தலைவர் தெரிவித்துள்ளார்.

ஒஸாமா பின்லேடன் தற்போதும் உயிருடன் இருப்பதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்;

ஆப்கானிஸ்தானின் குகைகளில் ஒஸாமா பின்லேடன் ஒளிந்திருப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாக உள்ளதால் பாகிஸ்தானுக்குள் அவர் தப்பிச் சென்றிருக்கலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-5)

## விளையாட்டு செய்திகள்

# அவுஸ்.சாதனைப்பட்டியல் ஹெய்டன் முதலிடம்

(கன்பெரா)

அவுஸ்திரேலிய அணி வீரர் ஹெய்டன் 2001 ஆம் ஆண்டில டெஸ்ட் போட்டிகளில் ஆயிரத்து 388 ஓட்டங்களைப் பெற்று. அவுஸ்திரேலிய சாதனைப்பட்டியலில் முதலாம் இடத்திலுள்ளார்.

இவர் மொத்தமாக 14 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி ஆயிரத்து 388 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

தென்னாபிரிக்காவிற்கு எதிரான 2 வது டெஸ்ட் போட்டியில் 138 ஓட்டங்களைப் பெற்றதன் மூலமே இச் சாதனையைஎட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் 1964 ஆம் ஆண்டில் முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் சிம்சன் 14 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி ஆயிரத்து 381 ஓட்டங்களைப் பெற்று முதலாமிடத்தில் இருந்தார். அவர் தற்போது இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

எண்ணியார் எண்ணம்
இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்
- குறள்

# வலம்புரி

## பொய்மை நீக்கி புலர்க!

புதிய ஆண்டு இன்று மலர்கிறது. காலங்களின் கடப்பில், ஆண்டுகள் வந்து போகின்றனவே தவிர, புதிய மாற்றங்கள்- மறுமலர்ச்சிகள் எதனையும், மக்கள் கண்ணுற்றதாக இல்லை. குறிப்பாக இலங்கைத் தமிழ்மக்களின் வாழ்க்கை கடந்த இருபது வருடங்களாக இருள் சூழ்ந்து காணப்படுகிறது.

இந்த வருடம் சமாதானம் தோன்றும். அடுத்த வருடம் சமாதானம் கிடைக்குமென நம்பியே இருபதுவருடங்கள் புரண்டு விட்டது. நடந்தது எதுவுமேயில்லை. ஆக கண்ணீர்க் கதைகளே எஞ்சி நிற்கின்றன.

இத்தகையதோர் சூழ்நிலையில் 2002ம் ஆண்டு, யுத்த நிறுத்தத்துடன் மலர்வது மகிழ்ச்சிக்குரியது. கடந்த 20வருடங்களில் ஏற்படாத நம்பிக்கை, பிறக்கின்ற 2002ம் ஆண்டில் ஏற்பட்டிருப்பது ஆறுதலைத் தருவதாக இருக்கும்.

எனினும் இத்தகைய அமைதி- சமாதானம்- யுத்தநிறுத்தம் தற்காலிகமானதாக இருந்து விடக் கூடாது.

புதிய ஆண்டில் தெரிகின்ற சமாதானக் கீற்று முழுமையாக ஒளிபரப்பி உடைந்து போயுள்ள உள்ளங்களைத் தேற்ற வேண்டுமாயின், சமாதான முயற்சியில் பொய்மைக்கு இடமிருக்கக் கூடாது.

17ஆயிரம் மாவீரர்களின்தியாகத்தால், - அவர்களின்குருதியால்நனைந்து போயுள்ள தமிழ் மண்ணுக்கு சிங்கள அரசு வழங்கக் கூடிய ஒரே வெகுமதி தமிழீழமாகவே இருக்க முடியும்.

எனினும் ஒரு நாடு -ஒரு தேசம் என்ற நிலையில் இலங்கைத்தீவை சிங்கள அரசு வைத்திருக்கவிரும்பினால்--நினைத்தால் அதற்கேற்றவாறு உரிமைகளைக் கொடுக்க முன் வர வேண்டும்.

வடக்கை இணைப்பதா- கிழக்கைப் பிரிப்பதா என்றெல்லாம் வாதிக்க முனைந்தால், இலங்கை நாடு முழுமையாக தமிழீழமாக மாறி, அதிலிருந்துஸ்ரீலங்காவைப் பிரித்துத் தாருங்கள் எனக் கேட்டு தென்னிலங்கைச் சிங்கள இளைஞர்கள் போராட வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

எனவே இந்த விடயத்தில் அரசு பொய்மை நீக்கி தமிழர்களின்உரிமைகளை உவந்தளிக்க முன் வர வேண்டும் புலருகின்ற புத்தாண்டு அதற்கு வழி சமைக்கப் பிரார்த்திப்போம்.

# இனிய புத்தாண்டில் இறைவழி வாழ்வையேற்று இன்புற்று வாழத் திடசங்கற்பம் பூணுவோம்

இயேசுக் கிறிஸ்துவின் நினைவோடு கூடியதாய் விளங்கும் ஆண்டுக் கணிப்பில் 2002ம் ஆண்டு புத்தாண்டாக மலரும் இவ்வேளையில் இறைமகனை நினைவு கூருவோம். காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். மரண நிழல்படரும் நாட்டில் உள்ளோருக்கு ஒளி உதித்துப் பிரகாசித்தது' இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கிறிஸ்துவின் பிறப்பு வரலாற்றிலே இடம்பெற்றது. இறைவானில் படைக்கப்பட்ட மனிதன் இறைவனாக வேண்டும் என்ற தகாத ஆசையினாலே அவருக்கு எதிராகப் பாவம் செய்தான். அன்புத் தந்தையாகிய இறைவனின் அரவணைப்பிலிருந்து பிரிந்து சுதந்திரமாகச் செயற்பட விளைந்தான்.

இன்பவனத்திலே இன்னல்கள் அற்ற வாழ்க்கைவாழ்ந்த மனிதன் பேய்யனின் அறிவுரை கேட்டு இன்னல்களையும், இடைஞ்சல்களையும் துன்பங்களையும், சாவையும் நோவையும்தனக்கு வருவித்து கொண்டான். தன்னுடைய சாயலாகப் படைக்கப்பட்டவன் படும் வேதனைகளைக் கண்டு படைத்த இறைவன் பாராமுகமாகஇருக்கவில்லை மனிதனை மீட்கச் சித்தங் கொண்டவர். பெண்ணிடம் பிறந்தவராகத் தன் மகனை அனுப்புவதென்று வாக்குப் பண்ணினார்.

### இஸ்ராயேல் இனம்

இறைதிட்டம் செயற்படத் தொடங்கியது இஸ்ராயேல் இனத்தை இறைவன் தமக்கெனத் தெரிந்தெடுத்தார். அந்த இனத்திலிருந்து மனிதனை மீட்கும் இரட்சகர் தோன்ற வேண்டுமெனத் திருவுளங் கொண்டார். பிதாப்பிதாக்கள் நீதிபதிகள் அரசர்கள் இறைவாக்கினர்கள்வாயிலாகத் தமது திட்டத்தை மக்களுக்கு வெளிப்படுத்தினார். அந்நியர்களாலே அடிமைப் பட்ட நிலையில் வாழ்ந்த மக்கள் அரசுரிமை பெற்று சுதந்திரமாக வாழத்துடித்துக் கொண்டிருந்தனர். அரசியல் விடுதலையைப் பெற்றுத்தரும் ஒரு மீட்பரை இஸ்ராயேல் மக்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

### கன்னி மரியாளும் சூசையும்

காலம் நிறைவுற்ற போது கடவுள் கலிலேயாவிலுள்ள கன்னிகையான மரியாளிடம் எமது திட்டத்தைக் கபிரியேல் தூதன் மூலம் வெளிப்படுத்தினார். இறைவனால் ஆகாதது ஒன்றுமில்லை என்று நிரூபிக்க ஸ்நாபக அருளப்பர் எலிசபேத் அம்மாளின் வயிற்றிலே இறைவனின் அருளால் உற்பவித்துள்ளார். அவரே வரப்போகும் மெசியாவின் முன்னோடி என்று சான்று பகர்ந்தார். கன்னிமரியாள் இறை சித்தத்தை ஏற்றுக் கொண்டார். இறைமகன் இயேசு கன்னிமரியின் திருவயிற்றிலே கருவாகி உருவானார்.

தூய்மையும் ஏழ்மையும் ஒருங்கே அமையப் பெற்ற சூசையை இறைவன் கன்னி மரியாளுக்கு ஏற்ற துணைவனாகவும், இயேசுவைப் பாதுகாத்து வளர்க்கும் வளர்ப்புத் தந்தையாகவும் இறைவன் தெரிந்தெடுத்து திருமணம் என்னும் அருட்சாதனத்தால் இணைத்தார். ஏற்றுக் கொண்ட பணியைச் சூசை பிரமாணிக்கமுடன் செய்துவந்தார். அப்போதுகுடிக்கணக்கின் நாள் வந்தபோது பேறுகாலம் நெருங்கிக்கொண்டிருந்த மரியாளை அழைத்துக் கொண்டு தமது ஊருக்குப் புறப்பட்டார். சத்திரம் நிறைந்து காணப்பட்டதால் தங்குவதற்கு அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. மாட்டுக் குடிசைகள் மாளிகைகள் போல அவர்களை வரவேற்றன இறைதிட்டம் அதுவென உணர்ந்தவராய் அங்கே தங்கியிருந்த போது மண்ணவரைப் பாவத்திலிருந்து மீட்க வந்த மெசியா மாட்டுக் கொட்டிலிலே மனுவாக அவதரித்தார்'வானவர் இடையவர்கள், ஞானியர்கள் மீட்பராம் இயேசு குழந்தையைக் காண புறப்பட்டுச் சென்று ஆராதித்து வணங்கி அற்புதம் இதுவென ஆனந்தங் கொண்டனர்.

### அக்கிரம ஆட்சி

ஆட்சி புரிவோரும், அதிகாரம் தாங்குவோரும் அன்றும் இன்றும் தமக்குக் கீழ்ப்பட்டவர்களை அடக்கி ஆண்டு கொண்டே வருகின்றனர். ஏழைகளின் சொத்துக்கள் சுரண்டப்படுவதும் சூறையாடப் படுவதும் அவர்கள் அடிமைகள் ஆவதும் அந்த அடிமைத் தனத்திலிருந்து மக்கள் விடுதலைப் பெறத் துடிப்பதும் அன்றிலிருந்து இன்று வரை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. காலங்கள் மாறினாலும் காரண காரியங்கள் மாற்றமடையாமல் மக்களைத் துன்பத்தில் ஆழ்த்துவதிலேயே பணபலம் படைத்தவர் இன்பங்காணுகின்றார்கள்.

சமகால நிகழ்வுகள் கிறிஸ்துவின் காலத்தையும் அவர் பட்ட துன்புறுத்தல்களையும் அவர் மறைந்து வாழ்ந்த பாதுகாப்பற்ற வாழ்வையும், ஊர் ஊராகச் சென்று உயிரைக் காப்பாற்ற

[4 ஆம் பக்கம் பார்க்க]

**அன்ரனி பீற்றர்**

# தொய்வு வியாதிக்குத் துணிமூலம் வைத்தியம்

# எடின்பரோ பல்கலைக்கழக கண்டுபிடிப்பு

> தொய்வு (Asthma) வியாதிக்கு மருந்து ஒரு துணி. இலண்டன் எடின்பரோ சர்வகலா சாலையின் ஒரு புதிய கண்டுபிடிப்பு.
>
> செய்தி பி. பி. சி. வானொலி

இலண்டன் எடின்பரோ சர்வகலாசாலையைச் சேர்ந்த பத்து பேராசிரியர்கள் இந்த தொய்வு வியாதிபற்றி ஆய்வு செய்தார்கள். அவர்கள் மூன்று காரணங்களைக் கண்டுபிடித்துள்ளார்கள (1) ஒவ்வாமை (கிரந்தி) (2)சூடு. (3)வைரஸ் (ஒரு வகை கிருமி)

எமது உடம்பு பன்னிரண்டு நிமிஷத்துக்கு ஒரு தடவை ஒரு படை தோலை கழற்றிய வண்ணம் இருக்கின்றது. இந்த நிகழ்வு யார் கண்ணுக்கும் புலப்படாது. தொய்வு வியாதியை உண்டாக்கும் 'வைரஸ்' இந்த தோலை உண்டு வாழ்வதோடு இனப் பெருக்கத்தையும் உண்டுபண்ணுகின்றது.

### சாதாரண உஷ்ணம்

சாதாரணமாகஎல்லோருக்கும் 98 4 பாகை சூடு இருந்து கொண்டேயிருக்கும். குறிப்பாகஎலும்புக்குளேயுள்ள மஜ்ஜை குறையாககாணப்படுபவர்கட்கும்உருகியநிலையில் உள்ளவர்கட்கும் இயல்பாகவே வெப்பமுள்ளசிலருக்கும் உடல் சூடாக இருக்கும். (இது காய்ச்சல் அல்ல) 90 4 பாகை சூடு தான் இருக்கும். இந்தச் சூடு (உஷ்ணநிலை) இந்த வியாதிக்கு காரணம் எனவும்.

# மருத்துவ விளக்கம்

### ஒவ்வாமை

ஒவ்வாமை (ALERGIC) கிரந்தி என்பது சிலருக்கு சில உணவுகள் ஒவ்வாமையாக இருக்கும். சீதோஷண நிலை, பனி, மழை ஆகியனவும் சிலருக்கு ஒவ்வாமையாக இருக்கும். குறிப்பாக, சூடை, றால், நண்டு, கணவாய், தக்காளிக்காய், கத்தரிக்காய், மாட்டு இறைச்சி, கொய்யாப்பழம். அன்னமுன்னாப் பழம், அன்னாசிப்பழம் ஆகியன சாதாரணமாக பலருக்கு ஒவ்வாமையை தோற்றுவிக்கும்.

ஏதாவது ஒத்துக்கொள்ளவில்லையானால் உணவு உட்கொண்ட 24 மணி நேரத்துக்குள் தொய்வு (Asthma) தும்மல், தேகத்தில்தடிப்பும் சொறிவும் தோன்றும். சிலருக்கு புகைத்தல் ஒவ்வாமையாக இருப்பதுண்டு. எமது சிந்தனைக்கும் ஆய்வுக்கும் எட்டியவாறு எமக்கு எது ஒத்துவரவில்லையென்பதை நாமே கண்டு பிடித்து அதை விலக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

மேற் கூறிய காரணங்களை கண்டுபிடித்தபேராசிரியர்கள் மருந்தையும் கண்டுபிடித்தார்கள்.

### துணி

மருந்தை ஊற்றி உற்பத்தி செய்யப்பட்ட ஒரு துணியை கண்டு பிடித்தார்கள். மருந்துகளை அவர்கள் வெளியிடவில்லை அந்த துணியை சேட் ஆகவோ, கோட் ஆகவோ சால்வையாகவோ, போர்வையாகவோ நாம் உபயோகிக்க வேண்டும். எமது உடம்பில் அந்த துணிமுட்டிக்கொண்டேயிருக்க வேண்டும் தொய்வு வராது. தொய்வு வந்த பின் இந்த துணியுடன் முட்டிக்கொண்டால்தொய்வு உடனே நின்று விடும் (குணமடைந்து விடும்) 90 வீதம் வெற்றியளித்துள்ளது. இலண்டன் தன்நிறைவுகண்ட பின் எந்த நாடு கேட்டாலும் தாங்கள் அனுப்பிவைப்பதாக அந்த ஒலிபரப்பில் கூறப்பட்டது. □

**டாக்டர் பே. எட்வேட்**
ஆனைக்கோட்டை

## தினசரி தியானம்

### அன்பு

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே!

திருமந்திரம்

அன்புக் களஞ்சியமே! என்னை நீ அன்பில் தோய்த்து அன்புமயம் ஆக்கிவிடாயோ? அன்பிலாது நான் எங்ஙனம் உயிர் வாழ்வேன்? உன்னிடத்திருந்தல்லாது அன்பை நாடி நான் வேறு எங்கு செல்வேன்?

வாழ்வை இனியதாக்குவது அன்பு, கஷ்டங்களையெல்லாம் மீளச் செய்வது அன்பு, குடும்பவாழ்க்கையை மேன்மைப் படுத்துவது அன்பு, உலகவாழ்க்கையைச் சுவைக்கச் செய்வது அன்பு, அழகற்றதற்கு அழகூட்டுவது அன்பு, அன்பு பொலியுமிடம் சுவர்க்கம் அன்புமறைந்த விடம் நரகம், மனமே, நீ அன்பில் ஊறிவளர்க.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# மலரும் புத்தாண்டில் சமாதானம் நிலைக்கட்டும்..

*புத்தாண்டுச் செய்தியில் இந்து சமயப் பேரவை*

கடந்த சில தசாப்தங்களாக நமது நாட்டில் நடைபெற்று வரும் போரால் துன்பப்பட்டு அவல நிலையில் வாழும் சோக வாழ்வு ஒழிந்து அமைதி, சாந்தி, சமாதானம் நிறைந்த உயரிய வாழ்வு சகலருக்கும் கிடைக்க புத் தாண்டில் எல்லாம் வல்ல ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரனை ஒரு கணம் பிரார்த்திக்கின்றோம்.

அரசியல் குரோதங்களை மறந்துஅனைத்து அரசியல் கட்சிகளும் இந்தநாட்டில சமாதானத்தைக்கட்டியெழுப்ப செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

மறைந்துநிற்கும் நீதி, நியாயம் என்பவை மீண்டும் சகல மட்டங்களிலும் பிரகாசிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட மக்கள் அனைவரும் ஏங்கி நிற்கின்றனர்.

தெருவோரங்களிலும் உறவினர் வீடுகளிலும் அல்லற்பட்டு இடம் பெயர்ந்துவாழும் மக்களின் அவல வாழ்வு மாறவேண்டும்.

போரால் அழிக்கப்பட்டு இது வரை புனரமைப்புச் செய்யாத குடியிருப்புகளும் ஆலயங்களும் நிறுவனங் களும் புனரமைப்புப் பெற்று புதுப்பொலிவு பெற வேண்டும். என்றும் அப்புத்தாண்டுச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**சடலம்...**

டாக எடுத்துச் செல்லப்பட்டு விடு தலைப் புலிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

---

**காணாமல்...**

இந்நிகழ்வில் 250க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உட்பட மனிதநேய அமைப்பின் தலைவர் எஸ்.பரமநாதன், செயலாளர் எ.கே.சிவசுப்பிரமணியம் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி பருத்தித்துறை அமைப்பாளர் சு.ம. செபஸ்ரியன் மற்றும் பொது அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

''காணாமல் போனவர்கள் தொடர்பில் விபரங்களை தெரிவிக்க அரசாங்கம் தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருகின்றது இந்நிலையில் எமது உறவுகள் எங்கே'' என்று அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கும்போது பொது மக்கள் கூட்டாக உணர்ச்சிவசப்பட்டு கேள்வி எழுப்பியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மகஜர் கையளிப்பு நிகழ்வில் மனித நேய அமைப்பின் தலைவர் எஸ்.பரமநாதன் உரையாற்றினார் அரச அதிபர் கே.சண்முகநாதனும் பதிலுரை வழங்கினார்

(இ.19-2)

---

**விஷேட...** வர்த்தமானி அறிவித்தல் நாளை புதன்கிழமை வெளியிடப்பட்டிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜோசப் பரராஜசிங்கத்திடம் தெரிவித்தார்.

பொருளாதாரத்தடை தொடர்பாக பிரதமர் ரணில் தெரவித்திருப்பதாவது அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தடைநீக்கத்தை அடுத்து ஏனைய பொருட்களான சீமெந்து உரம் எரிபொருள் ஆகியவற்றின் மீதான தடை இம்மாத நடுப்பகுதியில் நீக்கப்படும். என்றும் தெரிவித்தார்

இந்நிலையில் யுத்தநிறுத்தம், மோதல் தவிர்ப்பு ஆகியவற்றின் போது மக்களுடையதும் விடுதலைப் புலிகளினதும் நடமாட்டத்தை மட்டக்ளப்பில் கட்டுப்படுத்துவதாகவும் அண்மையில் மட்டக் களப்பில் இடம்பெற்ற சம்பவத்தையும் ஜோசப் பரராஜசிங்கம் ரணிலுக்கு சுட்டிக் காட்டி இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார்.

இது இவ்வாறு இருக்க முப்படைத்தளபதி ஜனாதிபதி சந்திரிகாவாக இருந்து வருவதால் பொருளாதாரத் தடைநீக்கம் இழுபறி நிலையில் இருந்து வருகிறது இந்நிலையிலேயே ஜோசப் பரரா ஜசிங்கம் பிரதமர் ரணிலுடன் பொருளாதாரத் தடைநீக்கம் தொடர்பாகவும் யுத்த நிறுத்தம் தொடர்பாகவும் பேசியமை இங்க


வாடிக்கையாளர் அன்பர்கள் யாவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

2002ம் ஆண்டு புதுவருட அன்பளிப்பு

TWO FLOPPY DISKETTES அல்லது
Computer துணையுறுப்புக்கள் ஏதாவது கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு

அழகிய வர்ணக் கலண்டர் இலவசம்

புத்தாண்டு தினம் மட்டும் சந்தர்ப்பத்தை தவறவிடாது உடன் நாடுங்கள்

Sri murugan Computer Systems & Comunication Service
303 KKS Rd Jaffna T.P2670 Fax3214 E.mail:del sm skr @eureka.lk


## சிறுவர் உரிமைகள் தொடர்பான போட்டிகள்

சிறுவர் பாதுகாப்பு (ஐக்கிய இராச்சியம்) சிறுவர் உரிமைகள் பயிற்சியாளர் குழுவுடன் இணைந்து 18 வயதுக்கு உட்பட்டட சிறார்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான பொட்டிகளினை நடாத்த உள்ளது.

### விடயத் தலைப்புக்கள் யாவை?

சிறுவர் காண விரும்புகின்ற யாழ்மாவட்டம்
யாழ்மாவட்டத்தில் சிறுவர்களது நிலைப்பாடு
சிறுவர் உரிமைகனினைச் செயல்வடிவமாக்கவதில் பிறரது பங்கம் செயற்பாடும்

மேற்படி விடயங்களில் ஒன்றையேனும் மையமாகக் கொண்டதாக ஆக்கங்கள் அமைக்கப்பட்டிருத்தல் அவசியம்.

### போட்டி வகைகள் தான் என்ன?

ஓவியம் (இதில் மட்டும் கீழ்ப்பிரிவு -10 வயதுக்கு உட்பட்ட - சிறார்களும் பங்குபற்றலாம்) சிறுவர்களுக்க கட்டுரை, சம்பாஷித்தல் போன்ற போட்டிகள் மேற்பிரிவு (11-14) மத்தியபிரிவு (15-18) மற்றும் அங்கவீனர்கட்கு என நான்கு பிரிவுகளில் மூவகைப் போட்டிகள் வலயரீதியாக நடைபெறும்.

### நிபந்தனைகள் இவ்வளவு தானா?

இன்னும் சில உள்ளன: அவை வருமாறு,

கட்டுரை, ஓவியம் தயாரிக்கப்பட்டு முற்கூட்டியே அனுப்பப்படலாம். எனினும் பின்வரும் விடயங்களினை கவனத்திற் கொள்ளவும்.

ஆக்கம் சொந்தமானது என்பது விண்ணப்பதாரரும், அலுவலர் ஒருவரும் உறுதிப்படுத்தல் வேண்டும். (பெயர், பிறந்ததிகதி, பங்கபற்றும் விடயம் போன்ற விபரங்களுடன் தனித்தாளில்) மத்தியபிரிவினர் 250 சொற்களுக்கு குறையாமலும் மேற்பிரிவினர் 350 சொற்களுக்கு குறையாமலும் A4 வெள்ளைத்தாளில் - ஒரு பக்கத்தினை மட்டும் பயன்படுத்தி கையெழுத்தில் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும். பக்கங்கள் இலக்கமிடப்படல் நன்று.

ஓவியமானது **45x35 cm** அளவிக்கு குறையாமல் எந்தவொரு வெள்ளை வரைதற் தாளிலும் வரையப்படலாம். எவ் வகை வர்ணமும் பயன்படுத்தலாம்.

சம்பாசித்தல் நிகழ்விலே 25 பேர் வரை பங்குபற்றலாம். குரலமைப்பு, தொனிக்கட்டுப்பாடு பின்னணி இசை, கருத்து போன்றன மட்டுமே கவனத்திற் கொள்ளப்படும். 5 -10 நிமிடங்களுக்குள் விடயம் அமையலாம். விளம்பரப் பாணியாக கூட அமையலாம்.

### பரிசு என்ன தருவீங்கள்?

நிச்சயமாக உங்கள் தேவைகளினை ஓரளவிற்கேனும் திருப்தி செய்யத்தக்கதான பரிசில்களும் பெறுமதியான சான்றிதழ்களும் உண்டு. ஓவியங்கள் யாவுமே மாவட்ட ரீதியில் கண்காட்சியாக வைக்கப்படும். தங்களுக்கான பரிசில்கள் கூட பெரிய விழா ஒன்றில் வைத்து வழங்கப்பட உள்ளது. போதுமா?

### சரி எப்ப போட்டி சொல்லுங்கள்? நாங்கள் எப்படி விண்ணப்பிப்பது? முடிவுகள் எப்ப வெளிவரும்?

நீங்கள் தற்போது எப்பகுதியில் வசிக்கின்றீர்களோ அதே கிராமம் உள்ள பிரதேச செயலகத்தில்/ உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உள்ள '*சிறுவர் உரிமைகள் பயிற்சியாளராகவுள்ள*' அண்ணா/அக்காவிடம் விண்ணப்ப படிவங்களினையும் அனைத்து விபரங்களினையயும் பெற்றுக் கொள்ளுங்கள். கட்டுரை, ஓவியங்களினையும் அதே அலுவலரிடம் கையளிக்கவும்.

சம்பாசித்தல் போட்டிகள் வலயரீதியாக பின்வரும் இடங்களில் நடைபெறும் அனைத்து முடிவுகளும் அன்றைய தினமே அறிவிக்கப்படும்.

பி.கு:- கட்டுரைப் போட்டிக்கு ஆக்கங்களினை அனுப்பியவர்களிடமிருந்து முதற்சுற்றுமூலம் தெரிவாகும் விண்ணப்பதாரருக்கான நேர்மகக் கலந்துரையாடலானது இதே தினத்தில் நடைபெற்று இறுதிச் சுற்று மூலமே வெற்றியாளர்கள் தீர்மானம் செய்யப்படுவர்.

**அனைத்துப் போட்டிகளுக்குமான முடிவுத் திகதி:- 14.01.2002**

*கட்டுரைக்கான இறுதிச் சுற்று மற்றும் சம்பாசனைசெய்தல் போட்டிகள் நடைபெறும் இடம் காலம் பற்றிய விபரங்கள்*

| *பிரிவுகள்* | *உள்ளடங்கும் பிரதேச செயலர் பிரிவுகள்* | *போட்டி நடைபெறும் இடம்* |
|---|---|---|
| A தீவக வலயம் 16.01.2002 (புதன் கிழமை) | வேலனை நெடுந்தீவு ஊர்காவற்துறை கலை 9.30 (பு.நே) | வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம். |
| B யாழ் வலயம் (17.01.2002) (வியாழக்கிழமை) | கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் காலை 9.30 (பு.நே) | யாழ்இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம் |
| C வலிகாமம் வலயம் (17.01.2002) (வியாழக் கிழமை) | தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் காலை 9.30 (பு.நே) | மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி |
| D வடமராட்சி வலயம் (18.01.2002) (வெள்ளிக்கிழமை) | கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணிகாலை காலை 9.30 (பு.நே) | வட இந்து மகளிர் கல்லூரி |

(இடம் பெயர்ந்த சிறார்கள் தற்போது வசிக்கம் பிரிவை கவனத்திற் கொண்டு பங்கபற்றலாம். மேலதிக விபரங்கள் தங்களுக்குரிய அலுவலரிடமிருந்து கிடைக்காத பட்சத்தில் மட்டும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ)
இல. 146, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.


வாடிக்கையாளர்கள் நண்பர்கள் ஊழியர்கள் அனைவர்களுக்கும்

புத்தாண்டு 2002 வாழ்த்துக்கள்

அன்றும் இன்றும் என்றென்றும் ......
கல்யாண பட்டுச் சேலைகள், பட்டுவேட்டிகள் மற்றும் அனைவர்களுக்குமேற்ற ஆடைவகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் தெரிவு செய்திட நாடுங்கள்

காவேரி பட்டுச் சோலை

48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் 021- 2333


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 01.01.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# புத்தாண்டு சிறப்

தமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் யாவருக்கும்
புத்தாண்டுநல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்
பெருமகிழ்ச்சி அடைகின்றார்கள்
மகாநந்தி ஜு வல்லறி ஸ்தாபனத்தினர்

உங்கள் அங்கங்களில் எங்கள் தங்கங்கள்
மின்னிப்பிரகாசிக்க இன்றே நாடுங்கள்



**மகாநந்தி ஜுவல்லறி**

72A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

C\3129

அனைவருக்கும் சாந்தி, சமாதானம்,
சௌபாக்கியம் நிறைந்த ஆண்டாக
மலர்ந்துள்ள புத்தாண்டு அமைய வேண்டுமென
எமது நல்வாழ்த்துக்கள்

அழகிற்கு மெருகேற்றும்
அழகு சாதனப் பொருட்கள்
நவீன வடிவமைப்புக் கொண்ட
மணிக்கூட்டு வகைகள்
றேடியோ வகைகள்
மற்றும் பாடசாலை உபகரணங்கள்

**தேவன் பென்சி**

இல 9, பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

3678

எம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எம்மினிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன் தரம்மிக்க
அசல் 22 கரட் தங்க-வைர நகைகளை
உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்திட



**நியூ நகுலா ஜ்வல்லறி**

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**நியூ லலிதாஸ் ஜ்வல்லறி**

171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**நகுலா நகை மாடம்**

241 G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

C\3128

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்கள், வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும்
எம் உள்ளம் நிறைந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்





புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள்
M.D 90 றீ கொண்டிசன் மோட்டார் சைக்கிள்கள்,
அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்,
பற்றரி வகைகள்,
அசிட் வகைகள்,
சோலர் வகைகள்
அனைத்தையும் நியாய விலையில் ஓரிடமாகப் பெற்றுக்கொள்ள

**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**

இல 108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை பிரதான வீதி, சங்கானை.

**அருள் விநாயகர் றேடர்ஸ்**

இல 106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C 3130)

# றப்பு மலர் 2002

*வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,*
*நண்பர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும்*
*எமது உளம் கனிந்த*

**புது வருட நல் வாழ்த்துக்கள்**

**எரிக் கணேஷ்**

- உங்கள் கண்களைப் பரிசோதித்து அழகு நிறைந்த கண்ணாடி பெற்றுக் கொள்ள ....
- உங்கள் அழகை மென்மேலும் மெருகூட்ட, முகப் பொலிவு பெற சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ள....
- மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ள் .....
- கட்டுப் பற்களை சுத்தம் செய்யும் குளிசைகளை பெற்றுக் கொள்ள..................



**எரிக் கணேஷ்**

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.

80, பழைய பொலிஸ்
நிலையம் முன்பாக,
சுன்னாகம்

தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தமது உளம் கனிந்த புத்தாண்டு ந
வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றன

மல்லிகா மிக்ஷர் மாளிகையினர்

நறு................ நறு...............
மொறு............. மொறு................

காரமான சுவையுடன் ரேஸ்ற்ரி பம்பே ரிப்பீஸ்
அனைத்து சிற்றுண்டி உணவு வகைகளுக்கும்
சங்கமிக்கும் சாம்ராஜ்யம்

**மல்லிகா**

**மிக்ஷர் மாளிகை**

**உங்கள் நாவினிக்கும்**
**சிற்றுண்டி உணவகம்**

**149, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாண**

எமது வாடிக்கையாளர்கள்,
அன்பர்கள்,
நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

**இலங்கை வங்கியின்**

**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

**இலங்கை வங்கி**


உங்கள் தேவைகளைச் சந்திக்கும்.

(C3135)

# புத்தாண்டு சிறப்

## மன்னிப்பின்றி நீதியில்லை நீதியின்றி சமாதானமில்லை”

### லக சமாதான தினம் - ஜனவரி 01 2002 திருத்தந்தையின் செய்தி



சமாதான உரைக்கு முன்னுரை

ிருத்தந்தை 2ஆம் அருளப்பர் ளப்பர் கத்தோலிக்க மதத்தின் கத் தலைவராக இருந்தாலும் க பொதுநல விடயங்கள் பற்றில் அதிக ஆர்வமும் கறையும் கொண்டுள்ள ஒரு வராக செயற்பட்டு வருவது கூடு. உலக சமாதானமே நடைய முதல் கவனமாகவும் னையாகவும் இருக்கிறது. கில் அமைதியை சமாதானத நிலைநாட்ட குரல் கொடுத்துக் ண்டும் உழைத்துக்கொண்டும் ் தலைவர்களில் பாப்பரசர் வர் என்பதில் எந்த மில்லை.

வ்வொரு ஆண்டின் முதல் த்திலும் தமது சமாதான தியை வெளியிட்டு உலகில் மனதுள்ள அனைவருக்கும் கில் சமாதானம் மலர ழக்கவும் செபிக்கவும் ழப்புவிடுத்துக்கொண்டே கிறார்.

வ்வொரு ஆண்டும் ஜனவரி ம் 24ஆம் திகதி புனித ர்சிஸ்க்குவின் நகரான அசிசீ ் உலக சமயத் தலைவர்கள் னவரையும் அழைத்து தானத்துக்கான செப வழிபாடு ினை நிகழ்த்தி உலகிலே த அமைதியும் நிரந்தர தானமும் நிலவ வழிவகுக் .

5ஆவது உலக சமாதான ் 2002ஆம் ஆண்டு தை மாதம் ் திகதி ஆகும். அன்றைய க சமாதான தினத்துக்கான தியினை “மன்னிப்பின்றி யில்லை நீதியின்றி தானமில்லை” ( . . . . . ) ம் தலைப்பில் அமைத்து பர் மாதம் 8ஆம் திகதி திக்கான் நகரிலிருந்து ியிட்டுள்ளார்.

முழு உலகையும் அதிர்ச்சியில் த்திய உலகின் 3ஆவது ர்ந்த கட்டடமான உலகப் ் பெற்ற அமெரிக்காவின் டைக் கோபுரங்களென ழக்கப்படும் உலக வர்த்தக யமும் அமெரிக்க இராணுவத் லைமைப்பீடமான பென்டகனும் கப்பட்டு பல அப்பாவி உயிர்கள் க்கப்பட்ட சோக நிகழ்வையும் கப் பயங்கரவாதத்தையும் ாணியாக வைத்தே பாப்பரசரின் தான செய்தி முழுவதும் நகர்ந்து கிறது.

இந்த சமாதான செய்தியிலே னிப்பு நீதி என்ற இரு க்களுக்கு திருத்தந்தை கியத்துவம் கொடுக்கிறார். வ இரண்டின் அடிப்படையிலே தானம் உருவாக வேண்டும் கிறார். தமது இளமைக்கால சி, கொம்யூனிஸ அனுபவங் ன் மத்தியில் உலகில் பெறும் வன்முறை யையும் வையும் அவர் நோக்குகிறார். ரவாதத்தை வன்மையாக யுள்ள. அவர் தீவிரவாத செயற்பாடுகளில் இயங்குவது இறைவனுக்கு எதிரானது என்று தெரிவிக்கின்றார். மன்னிப்புதான் நீதியைக் கொண்டுவரும் அந்த நீதியின் வழிதான் நாம் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெளிவாகவும் துணிவாகவும் தெரிவிக்கும் அவர் இறுதியிலே சமாதானத்துக்காக செபிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

எமது செபம் தீவிரவாதத்தினால் தாக்கப்படுவோர் மத்தியில் மட்டுமல்ல தீவிரவாத செயல்களில் ஈடுபடுவோர் மீதும் இருக்கவேண்டும். இதனால் அவர்களும் தீவிரவாத செயற்பாடு களைவிட்டு நிரந்தர அமைதியின் வழிக்கு வரவேண்டும். உலகில் சாமதானம் நிலவவேண்டும் என அழைப்புவிடுக்கிறார்.

இந்த சிறிய முன்னுரையுடன் திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பரின் சமாதான தின உரை யின் சாராம்சத்தை சுருக்கமாக இக் கட்டுரையில் விளக்க முற்படு கின்றேன்.

**சமாதானம் அன்பினதும் நீதியினதும் செயலாகும்**

வேதாகம ஏடுகளில் எழுதப் பட்டுள்ள மனித மீட்பின் சரித்திரமானது முழு உலக சரித்திரத்தின் மேல் தன் ஒளியை வீசி மனித செயற்பாடுகள் எப்போதும் இறைவனுடைய இரக்கமான செயற்பாடுகளோடு இணைந்தே இருக்கும் என்பதைத் தெரிவிக்கிறது. இறைவனுக்கு இறுக்கமான இதயங்களை தொடவும் முழுமையாக பாழடைந்த நிலங்கள் போல் தென்படும் இடங்களிலிருந்து எப்படி நல்ல கனிகளை கொண்டு வரவும் முடியும் என்று தெரியும்.

இறைவனுடைய இரக்கத்தால் ஒரு உலகில் மேலோங்கிய தீமையான சக்திகள் மீளவும் மாற்றப்பட்டு மனித இதயத்தின் மேலான அபிலாசைகளை வெற்றியடைய செய்யும் ஒரு புதிய உலகாக அது மாற்றப்படும். அங்கு உண்மையான சமாதானம் நிலவும்.

மேலே குறிப்பிடப்பட்ட பயங்கர கொலைகள் உட்பட்ட அண்மை நிகழ்வுகள் எனது இதயத்தின் ஆழத்தில் இருக்கும் எனது வாழ்வின் சரித்திர நிகழ்வுகளுக்கு விசேடமாக எனது இளமை நிகழ்வுகளுக்கு மீளவும் மீளவும் இட்டு செல்கின்றன. நாஸிச, கொம்யூனிஸவாதிகளால் மக்களும், தனிநபர்களும் - எனது சொந்த நண்பர்கள், தொடர்பு டையவர்கள்கூட - அனுபவித்த பாரிய துன்பங்கள் எனது எண்ணத்திலும் செபத்திலுமிருந்து நீங்கவேயில்லை. இந்த பயங்கர வன்செயல்களுக்கு உட்படுத்தப்படும் சமூக ஒழுங்கையும் ஒழுக்க வியலையும் எப்படி நாம் சீர்செய்யப் போகிறோம்? என்ற நிரந்தர கேள்வியை நான் பலதடவைகளில் அமைதியாக இருந்து தியானித் துள்ளேன். வேதாகம வெளிப் பாடுகளிலிருந்து உறுதிப்படுத்தப்பட்ட எனது அண்மைக்கால முடிவுகள் நீதியும் மன்னிப்பும் இணைந்துவரும் பதிலில் தவிர வேறொன்றாலும் குலைந்துபோன அமைதியையும் ஒழுங்கையும் முழுமையாக சரி செய்யப்பட முடியாது என்கிறது. உண்மையான அமைதியின் தூண்கள் நீதியும், அன்பின் வகையிலான மன்னிப்புமே ஆகும்.

ஆனால், இன்றைய நிலையில் நீதியையும் மன்னிப்பையும் சமாதானத்தின் அடிப்படையாக எப்படி நாம் பேச முடியும்? எவ்வளவு கடினமாக இருந்தாலும், இது எங்களால் முடியும். நாம் கட்டாயம் பேச வேண்டும். மன்னிப்பு பழிவாங்குதலுக்கு எதிரானது. நீதிக்குரியது. “உண்மையிலேயே உண்மையான அமைதி என்பது நீதியின் வேலையாகும்” (எசாயா 32:17). சமாதானம் என்பது சரியான ஒழுங்கமைப்பின் கனியாகும்.

உண்மையான அமைதியானது நீதியின் கனியாகும். இது முழு பொறுப்புக்களுக்கும் உரிமைக ளுக்கும் முழுமையான மதிப்பை உண்மைப்படுத்துவதோடு நன்மைகளையும் தீமைகளையும் நீதியான விதமாக பகிர்ந்தளிக்கிறது. ஆனால், மனித நீதி எப்போதும் முழுமையற்றதும் உடையக் கூடியதுமாக இருப்பதால் தனிப்பட்ட நபர்கள் குழுக்களின் குறைபாடு களுக்கும் தனிப்பட்ட எண்ணங் களுக்கும் உட்பட்டதாய் இருக் கிறது. எனவே இது உடைந்த மனித உறவுகளை அத்திவாரத்திலிருந்து குணப்படுத்தவும் திரும்பக் கட்டி யெழுப்பவும் கூடிய மன்னிப்பினால் நிறைவுசெய்யப்பட வேண்டும். இது பெரிய சூழ்நிலைகளுக்கும் சிறிய சூழ்நிலைகளுக்கும் தனிப்பட்ட நிலைகளுக்கும் அதனைவிட பரந்த நிலைகளுக்கும் ஏன் சர்வதேச அளவுக்குமே உண்மையானது. மன்னிப்பு என்பது ஒருவகையிலும் நீதிக்கு எதிரானதல்ல. மன்னிப்பு என்பது தவறாக செய்யப்பட்டதை சரி செய்வதைப் போன்றது. உண்மையில் நீதியின் முழுமை அமைதியின் ஒழுங்கை நோக்கி அழைத்து செல்வது. அது முறியக்கூடிய தற்காலிகமான யுத்த நிறுத்தத்திற்கு மேலானது. மனித இதயங்களில் ஆழமாக ஏற்பட்டுள்ள காயங்களை குணப்படுத்தவல்லது. நீதியும் மன்னிப்பும் நீதி மன்னிப்பு ஆகிய இரண்டும் மனித இதயங்களின் ஆழமான காயங்களை குணப்படுத்த அவசியமானவை.

**அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை**

**தீவிரவாதத்தின் உண்மைநிலை**

இன்று சர்வதேச தீவிரவாதத் தினால் நீதியிலிருந்து பிறக்கும் அமைதியும் மன்னிப்பும் பெரிதாக தாக்கப்படுகிறது. தீவிரவாதம் நுண்மயமான வலைப்பின்னல் அரசியலையும், பொருளாதாரத் தையும், தொழில்நுட்ப வீழ்ச்சி யையும் ஏற்படுத்துகிறது. தீவிரவாதம் அண்மைக்காலங்களில் குறிப்பாக பனிப்போர் முடிவடைந்தபின் தேசிய எல்லைகளைத் தாண்டி முழு உலகையும் அரவணைக்கும் நிலைக்கு பரவியுள்ளது. நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தீவிரவாத குழுக்கள் பாரிய பொருளாதார மூலவளங்களை நம்பி பரந்த அளவிலான நுட்பங்களை உரு வாக்கி தீவிரவாதிகளினால் அறிவிக்கப்படும் குறிக்கோள்களுக்கு எந்தவித தொடர்புமற்ற அப்பாவி மக்களை தாக்குகின்றனர்.

தீவிரவாத அமைப்புக்கள் தம்மைப் பின்பற்றுவோரை தற்பாதுகாப்பற்ற முற்றும் எதிர்பார்த்திராத மக்களுக்கு எதிராக ஆயுதங்களாக அறிமுகப் படுத்தும்போது இறப்பின் ஆசையை தெளிவாக அவர்களுக்கு காட்டி தூண்டுகிறார்கள். வெறுப்பில் உருவாகும் தீவிரவாதம் நம்பிக்கை யற்ற தன்மையையும் மூடிய மனநிலையையும் தனிமைப்ப டுத்தப்படும் தன்மையையும் உருவாக்குகிறது. வன்முறையோடு பயங்கர தொடர்ச்சியாக இணைக் கப்படும் வன்முறை தொடர் சந்ததி யினரை தாக்குகிறது. ஒவ்வொரு வருக்கும் வெறுப்பை வழி முறை யாக தந்து தமக்கு முன்னே சென்றவர்களை பிரிக்கிறது. தீவிரவாதம் மனித வாழ்வின் அழிவுக்காக உருவாக்கப்பட்டது. இதன் காரணத்தினால் இது தாங்கிக்கொள்ள முடியாத குற்றங்களை செய்வதோடு மட்டுமல்லாமல் அரச இராணுவ வழியாக பயங்கரத்தை உண்டு பண்ணுகிறது. இது உண்மை யிலேயே மனித சமுதாயத்திற்கு எதிரான குற்றமாகும்.

தீவிரவாதத்திற்கு எதிராக ஒருவர் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அவருக்கு உரிமையிருக்கிறது. வழிமுறைகளுக்கும் முடிவுகளுக்கும் ஏற்ப ஒழுக்க சட்ட கட்டுப்பாடுகளின் மதிப்பில் இது செயற்படுத்தப்பட வேண்டும்.குற்றவாளி தெளிவாக இனங்காணப்பட வேண்டும். குற்றம் செய்யும் தன்மையானது எப்போதும் தனித்தன்மை வாய்ந்தது. இதை தீவிரவாதம் சார்ந்திருக்கும் தேசத்திற்கோ இனத்திற்கோ சமயத்திற்கோ விரிவுபடுத்த முடியாது. தீவிரவாதத்திற்கு ஆட்களை சேர்ப்பது உரிமைகள் மிதிக்கப்பட்டும் அநீதிகள் மிக நீண்டகாலமாக பொறுத்துக் கொள்ளப்பட்டும் உள்ள ஒரு சூழ்நிலையில் இலகுவானது.

இருப்பினும் உலகில் இருக்கும் தீவிரவாத செயற்பாடுகளை ஒருபோதும் அநீதிக்கு எதிரான செயல்களாக மன்னிக்க முடியாது என்பதை தெளிவாக அறிவிக்க வேண்டும்.ஒழுங்கமைப்பை உடைத்து தீவிரவாதம் சாதிக்க விரும்புவதால் பாதிக்கப்படுவது எண்ணப்பட முடியாத மில்லியன் கணக்கான ஆண்களும் பெண்களுமே என்பது இங்கு தெளிவாக்கப்பட வேண்டும். இவர்கள் மிகவும் ஒரு குறுகிய எல்லையில் உயிர் வாழும் அபிவிருத்தியடையும் நாடுகளைச் சார்ந்தவர்கள் என்பதால் மிக இலகுவாக பொருளாதார அரசியல் குழப்பங்களால் தாக்கப்படுகிறார்கள். வறியவர்களுக்காக தாம் செயல்படுகிறோம் என்று தீவிரவாதிகள் தெரிவிப்பது தவறானதாகும்.

**இறைவனது பெயரால் கொலை செய்யவேண்டாம்**

தீவிரவாத செயல்களால் கொலை செய்பவர்கள் உண்மையிலேயே மனித சமுதாயத்தையும் மனித வாழ்வையும் எதிர்காலத்தையும் பாழாக்குகிறார்கள். அவர்களுடைய பார்வையில் எல்லாம் வெறுக்கப் படவும் அழிக்கபடவும் வேண்டும். தீவிரவாதிகள் தாம் நம்பும் உண்மையால் அல்லது அனுபவித்த துன்பங்களால் தாம் காட்டும் எதிர்ப்பையும் அழிக்கின்ற அப்பாவிகளின் வாழ்வையும் சரியானது என வாதிடுகின்றார்கள். தீவிரவாத செயற்பாடு என்பது அநேக வேளைகளில் அடிப்படைவாத வெறியின் செயல்பாடாகும். இது ஒருவரது உண்மை, மற்றைய எல்லோர் மேலும் திணிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் உருவாகின்றது. தீவிரவாதிகள் தம் குறிக்கோளை அடையும்போது - இது முழுமையற்ற ஒரு குறிக்கப்பட்ட அளவே அடையப்பட முடியும் - உண்மை திணிக்கப்பட முடியாது. இறை வனுடைய சாயலை பிரதிபலிக்கும் ஒரு மனிதனுடைய மனசாட்சியை மதிக்கவேண்டும். இது உண்மையை மற்றவருக்கு அறிவித்து அதன் செயற்பாட்டையும் அதன் பொறுப்பையும் அவரிடமே விட்டுவிடுவதற்கு சரியானது.

உண்மையை வன்முறை மூலமாக மற்றவர் மேல் திணிப்பது மனித மாண்புக்கும் இறுதியில் மனிதன் தன்னுள் தாங்கியிருக்கும் இறைவனின் சாயலுக்கும் இறைவனுக்கும் எதிரான குற்ற மாகும். இதன் காரணத்தால் அடிப்படைவாதம் எனப்படுவது பொதுவாக இறைநம்பிக்கைக்கு எதிரானதாகிறது. தீவிரவாதம் என்பது மக்களை மட்டும் அழிக்கவில்லை இறைவனையும் அழிக்கிறது. அது இறைவனை ஒருவர் தனது விருப்பங்களுக்காகப் பயன்படுத்தும் சிலை போலாக்குகிறது.

ஒரு சமயத் தலைவரும் தீவிரவாதத்திற்கு மன்னிப்பைத் தரவோ அதைவிட போதிக்கவோ முடியாது. ஒருவரது தீவிரவாதத்தை இறைவனுடைய பெயரால் அறிவிப் பதும் இறைவன் பெயரால் மற்றவர்களின் மேல் வன்முறையை செயற்படுத்துவதும் தேவ நிந்தனையாகும். தீவிரவாத வன்முறை மனிதனைப் படைத்து அன்பு செய்து அவனைப் பராமரிக்கும் இறைநம்பிக்கைக்கு எதிரானது. இது இயேசு ஆண்டவரிலும் அவர் தம் சீடர்களுக்கு கற்பித்த “எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களையும் மன்னியும்” (மத். 6:12) என்ற செபத்திலும் வைக்கும் நம்பிக்கைக்கு எதிரானது.

**மன்னிப்பு என்பது உண்மையிலே என்ன?**


மன்னிப்பு என்பது உண்மை யிலேயே ஒரு தனிப்பட்ட தெரிவு. உள்ளத்தின் ஆழத்தில் தீமைக்கு எதிராக தீமைஎன்று எழும் இயற் கையான உணர்வுக்கு எதிரானது. இந்த முடிவானது எமது பாவத்தின் மத்தியிலும் எம்மை இறைவனை நோக்கி அழைத்துசெல்ல வல்லது. “தந்தையே இவர்களை மன்னியும் ஏனெனில், தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை” (லூக். 23:34) என்று சிலுவையில் வேண்டிக் கொண்ட இயேசுவே மன்னிப்பின் முழுமையான உதாரணமாவார்.

மன்னிப்பு என்பது இறை பின்னணியையும் பிரமாணத்தையும் தன்னுள் கொண்டது. இவ்வாறு சொல்வது மன்னிப்பின் முக்கியத் துவத்தை மனித இதயத்தின் வாதத்திலும் ஒளியிலும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதல்ல. மன்னிப்பு என்பது முதன்மையில் தவறு செய்து விட்டோம் என்ற அனுபவத்தை மனித மனங்களில் தோற்றுவிப் பதாகும். இந்த அனுபவம் மனித இயலாத்தன்மையையும் மற்றவர்கள் தம்மோடு இரக்கமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் வேண்டி நிற்கிறது. எனவே மற்றவர்கள் எமக்கு செய்யவேண்டும் என்று நாம் விரும்புவதை நாம் ஏன் மற்றவர்களுக்கு செய்ய முடியாது. எல்லா மனிதர்களும் தமது தவறுகளிலும் குற்ற உணர்வு களிலும் தங்கியிருக்காமல் அவற்றைவிட்டு விலகி புதிய நம்பிக்கையோடு மீளவும் தொடங்கவே விரும்புகின்றனர். அவர்கள் எல்லோரும் புதிய எதிர்பார்ப்புடனும் அர்ப்பணத் துடனும் எதிர்காலத்தை நோக்கி தம் கண்களை உயர்த்தவே விரும்புகின்றனர்.

மன்னிப்பு என்பது முழுமையான ஒரு மனித செயற்பாடாகும். எல்லா வற்றையும்விட இது ஒரு மனித முன்முயற்சியாகும். தனிநபர்கள் அடிப்படையில் சமுதாய நபர்களே. அவர்கள் தமது உறவுகளை தாம் அனுபவிக்கும் நன்மை தீமைகளால் வெளிப்படுத்துகின்றனர். சமுதாயத்திற்கும் மன்னிப்பு மிக அவசியமாகத் தேவைப்படுகிறது. குடும்பங்கள், குழுக்கள், சமுதாயங்கள், நாடுகள், சர்வதேச சமூகங்கள் அனைத்தும் தமது

(Vம் பக்கம் பார்க்க)

# றப்பு மலர் 2002



## புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க அனைவரும் முன்வரவேண்டும்

### -புத்தாண்டுச் செய்தியில் யாழ் ஆயர்-



புத்தாண்டு ஒன்று பிறந்துள்ளது. 2002ஆம் ஆண்டு எம்அனைவருக்கும் புதிய ஆண்டாய் மலர்ந்துள்ளது. இவ்வாண்டின் ஆரம்பத்திலேயே சமாதானத்தின் ஒளிக்கீற்றுக்களை காணக் கூடியதாய் இருப்பது மனதுக்கு பெரும்மகிழ்வையும், நம்பிக்கையையும் தருகின்றது. இந்த மகிழ்வும் நம்பிக்கையும் நின்று நிலைத்து எம் மண்ணில் நீடித்த அமைதியைத் தரவேண்டும் என்பதே எமது ஆசியும் வேண்டுதலுமாகும்.

இவ்வாண்டு எம்அனைவருக்கும் சமாதானத்தின் ஆண்டாக மலரவேண்டும். கத்தோலிக்க திருச்சபையானது கடந்த 35 வருடங்களாக ஆண்டின் முதல் நாளை சமாதான நாளாக பிரகடனப்படுத்தி கொண்டாடி வந்துள்ளது.

திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் 2002 ஆம் ஆண்டின் முதல் தின சமாதான செய்தியினை வத்திக்கான் நகரிலிருந்து டிசம்பர் மாதம் 8ம் திகதியே வெளியிட்டுள்ளார். மன்னிப்பின்றி நீதியில்லை நீதியின்றி சமாதானமில்லை என்ற தலைப்பில் அவர் வெளியிட்ட செய்தியில்உலக சமாதானத்தின் தேவையை வெகுவாக வலியுறுத்தியுள்ளார்.
அண்மையில் அமெரிக்காவில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல்களின் பின்னணியில் உலகம் முழுவதிலும் இன்று ஒரு அபாய நிலையும் எதிர்காலம் பற்றிய பய உணர்வும் தோன்றியுள்ளது. உலக அநீதிகளை கண்டிக்கவே தீவிரவாத செயல்களில் ஈடுபடுகிறோம் என்ற வாதம் ஒரு போதும் மன்னிக்க முடியாதது. இதனால் உலகெங்கும் வாழும் ஆயிரக்கணக்கான அப்பாவி ஆண்களும் பெண்களுமே தாக்கப்படுகிறார்கள் என்று தெளிவாக தெரிவித்திருக்கும் திருத்தந்தை அவர்கள்நீதியிலும் மன்னிப்பிலும் பிறக்கும் சமாதானம் இன்று சர்வதேச தீவிரவாதத்தினால் வெகுவாக தாக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கிறார். இன்றைய உலகில் மன்னிப்பையும் நீதியையும் சமாதானத்தின் அடிப்படைகளாக எம்மால் பேச முடியும் பேசவேண்டும் உண்மையான அமைதி நீதியின் கனியாகும்.• மன்னிப்பு என்பது குழம்பிய மனித உறவுகளை அடிப்படையிலிருந்து மீளக் கட்டியெழுப்பவும் சரி செய்யவும் வல்லது. மன்னியுங்கள் மன்னிப்பு பெறுவீர்கள் (லூக்.6:37) மன்னிப்பு என்பது ஒருபோதும் நீதிக்கு எதிரானதல்ல. மன்னிப்பு என்பது செய்யப்பட்ட தவறை திருத்துவதற்கு ஒப்பானது. மன்னிப்பு என்பது நீதியின் முழுமையாகும். இது மனித இதயங்களில் ஏற்பட்டுள்ள ஆழமான காயங்களை குணப்படுத்தவல்லது. நீதியும் மன்னிப்பும் நிச்சயமாக இநதக குணமாககுதலுக்கு அவசியமானது. இந்த நீதியும் மன்னிப்பும் இருக்கும்போது சமாதானம் மலரும் என்பது திருத்தந்தையின் அடிப்படைக் கருத்தாகும்.

எமது நாட்டில் அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலும் அதன் பின்னணியில் செயற்பட்ட பேரினவாதக் கொள்கைகளும், வன்செயல் கலாசாரமும் விளைவித்த அழிவுகளை நாம் நன்கு அறிவோம். எமது நாட்டில் புதிதாக ஆட்சி அமைத்துள்ள அரசு போரை முடிவுக்குக் கொண்டு வரவும் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கவும் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கையை சரிசெய்ய முற்படுவதும் மிகவும் வரவேற்கத்தக்கதும், மகிழ்ச்சிக்குரியதுமாகும். இந்த ஆரம்ப முயற்சிகள் முழு வெற்றியை காண வேண்டும்.
இம்முயற்சிகள் முழுவெற்றியை காணும்போதே எமது மகிழ்ச்சியும் முழுமையாகும். அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏற்கனவே அறிவித்துள்ள யுத்தநிறுத்த அறிவிப்பு நிச்சயமாக நம்பிக்கையின் கீற்றுக்களை நம் இதயங்களில் தோற்றுவித்துள்ளது. இவ்வறிவிப்புக்கள் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சனைக்கு ஓர் நிரந்தரத் தீர்வினை பெற்றுத் தரும் முன்முயற்சிகளாக முடிவைக் காண வேண்டும் என்பதே எமது வேண்டுதலாகும்.

திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அவர்கள் தமது சமாதானதின செய்தியை வலியுறுத்தி வேண்டியிருப்பது மன்னிப்பாகும். அரசும் விடுதலைப் புலிகளும் மற்றயதரப்பினரும் கடந்தகால கசப்புணர்வுகளையும், நம்பிக்கையீனங்களையும், பகைமை உணர்வுகளையும் மன்னித்து மறந்து ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்க முற்பட வேண்டும் அப்போதுதான் மன்னிப்பின் வழி நீதியும் நீதியின்வழி சமாதானமும் எம்மண்ணில் மலர முடியும்.

நீண்டகாலமாக வடபகுதி மக்கள் அனுபவிக்கும் பல்வேறுபட்ட அன்றாட துன்ப, துயர அனுபவங்களுக்கு அடிப்படையாக இருப்பது பெருநிலப் பரப்புடன் தொடர்பற்று இருக்கும் தரைவழிப் பாதையாகும். இத் தரைவழிப் பாதை திறக்கப்படும் பட்சத்தில் வட பகுதி மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பல பிரச்சனைகள் இலகுவாக தீர வழியுண்டு. இத்தரை வழிப் பாதையை ஒரு சுமூக மான தீர்வின் அடிப்படை யில் திறந்து விரைவில் யாழ்-வன்னி மக்களது துன்பங்களுக்கு ஓர் முடிவினைக் கொண்டுவர வேண்டும் என்று இவ்வேளையில் அழைப்பு விடுக்கின்றேன்.
தமிழ்பேசும் மக்கள் அனைவருக்கும் இப்புதிய ஆண்டில் ஆண்டவரின் அருளை சமாதானத்தை அமைதியை வேண்டி புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

மேதகு
தோமஸ் சௌந்தரநாயகம்
ஆண்டகை
யாழ் ஆயர்,

ஆயரில்லம்
யாழ்ப்பாணம்

## 'இன்னல்கள் யாவும் நீங்கு

### சர்வதேச இந்து மதகுரு பீடாதிபதி அருளாசிச் செய்தி

இன்று புதிய ஆண்டாக 2002 பிறக்கிறது. கடந்த காலங்களில் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள், கஸ்டங்கள், சங்கடங்கள் அனைத்தும் நீங்கி நாட்டில் புரையோடிக் கிடக்கும் கொடிய யுத்தம், நிறுத்தப்பட்டு அனைத்து மக்களும் சுபீட்சமுடனும், சுதந்திரமாகவும், சுய கௌரவத்துடனும், வாழ நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம், நிலவும் ஆண்டாக புதிய ஆண்டில் புதிய தனைகளோடு புரிந்து வுகளோடு, புதிய அர கமும் மக்களும் பேர தப் பெருவாழ்வு இறையருளை வே எமது பூரண அருளாசிக வழங்குவதில் மனநி கொளிகின்றோம்.

சுபம்.

ஓம் சாந்தி! சாந்தி! சா
சர்வதேச இந்து
குருபீடாதிபதி
ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்
சிவாச்சாரியார்

## பிறக்கட்டும் புது யுகம

### புத்தாண்டுச் செய்தியில் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றிய

இன்று மீண்டும் ஒரு புதிய ஆண்டு மலர்ந்திருக்கிறது.புதிய நம்பிக்கைப் பூக்கள் மலர்கின்றன. வழமையான புத்தாண்டுகளை விட இந்த புத்தாண்டுபல புதிய எதிர்பார்ப்புகளுடன் பிறக்கின்றது.

புதிய அரசு, புதிய கொள்கைகள் ,புதிய சிந்தனைகள், புதிய அறிவிப்புகள், சமாதானததிறகான இரு துறைஅறிவிப்புகள் இவையெல்லாம் ஈழத் தமிழ் மக்களின் விடிவெள்ளியாகத் தோன்றுகின்றன.

வெறுப்பையும்,துயரையும் தருகின்ற கொடிய யுத்தம் முற்றாக அகன்றுவிடவும், பரஸ்பரம் புரிந்துணர்வும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் வளர்ந்து தமிழ் மக்களின் உண்மையான அபிலாஷை நிறைவேற்றக்கூடிய யில் சாந்தியும், சமா மும் நீடித்து நிலை வேண்டும் என்று பிர திக்கின்றோம்.

நாட்டுக்கு மக்கள் அ வரும் ஒற்றுமையாக னத வாழ்க்கை வாழ சுபீட்சமடையவும்,ந நல்லாசிகளை வழ இந்நாட்டு மக் அனைவருக்கும் எ உள்ளம் கனிந்த தாண்டு வாழ்த்துக்கள தெரிவித்துக்கொள்கிறே
''லோஹா சமஸ்தா சுகிணோ பவந்து''

கா. சந்திரசேகர சர்ம
பொதுச் செயலாளர்
சர்வதேச இந்து
குருமார் ஒன்றியம்.

### மன்னிப்பின்றி நீதியில்லை.....

உறவுகளைப் பலப்படுத்த தவறுகளை சீர்படுத்த மன்னிப்பை வேண்டி நிற்கின்றன.

**சமாதானத்துக்கு செபிப்போம்**

சமாதானத்துக்காக செபிப்பது என்பது சமாதானத்துக்காக உழைப்பதற்கு அடுத்ததல்ல. சமாதானத்துக்காக செபிப்பது என்பது நீதியையும் விடுதலையையும் சமாதான ஒழுங்கமைப்பையும் கட்டியெழுப்புவதற்கு சமமானது. சமாதானத்துக்காக செபிப்பது என்பது மனித இதயங்களில் இறைவனின் சக்திப்படி அனைத்தையும் புதுப்பிப்பதற்கு சமமானது. இறைவன் தமது இரக்கத்தால் சமாதானத்துக்கான வாசல்களை திறந்து தெரிகின்ற தடைகளை தகர்க்க வல்லவர். அவர் மனித குடும்பங்களின் முடிவற்ற சரித்திர முறிவுகள் குழப்பங்கள் மத்தியில் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தி அதிகரிக்க வல்லவர்.
சமாதானத்துக்காக செபிப்பது நீதிக்காக செபிப்பதாகும். நாடுகளுக்கும் மக்களுக்கும் இடையே உறவுகளை சரிப்படுத்த செபிப்பதாகும். குறிப்பாக ஒவ்வொரு தனிநபரதும் மனித சட்ட உரிமைக்கும் சமய சுதந்திரத்துக்கும் செப்பதாகும். சமாதானத்துக்காக செபிப்பது என்பது இறைவனு மன்னிப்பை நாடுவே எங்களுக்கு எதிராக இழைத்தவர்களுக்கு மன்னி வழங்க உறுத பெற்றுக்கொள்வதாகும்.
சமாதான தினமாகிய நம்பிக்கையுள்ள அனை மனதுகளிலும் தீவிரவாதத்தி தாக்கப்பட்டவர்களுக் அவர்களின் குடும்பத்தினரு தொடர்ந்தும் பயங்கர யுத்தத்தினா தாக்கப்படுவோருக் நம்பிக்கையின் செபம் உருவாகவேண்டும். செபத்தின் ஒளியானது இரக்கமற்ற செயல்க இறைவனையும் மனிதனை மிக ஆழ வேதனைப்படுத்துவோர் மேலும் பிரகாசிப்பதாக. இத அவர்கள் தமது உள்ளங் ஆழமாக நோட்டமிட்டு செய்யும் தீமைகளை கவன எடுத்து எல்லாவித வன்செயல் எண்ணங்களை கைவிட்டு மன்னிப நாடுவார்களாக.
இந்த குழப்பமான நேர முழு மனித குடும்ப இரக்கத்திலும் நீதியிலும் க உண்மையான நிரந்தர அமைதியை காணுவார்கள

# புத்தாண்டு சிறப்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தமது புத்தாண்டு
நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றனர்.
அர்ச்சனா ஜுவலர்ஸ் ஸ்தாபனத்தினர்





நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக தங்கநகைகளை
22 கரட்டில் செய்து கொடுப்பதில் தனித்துவம் வாய்ந்தவர்கள்

## அர்ச்சனா ஜுவலர்ஸ்



118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

176/1, நாவலர் வீதி ,
யாழ்ப்பாணம்.

C\3103

---

துன்பங்கள் நீங்கி துயரங்கள் பறந்தோட
அன்பரகள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

காலத்துக்குக் காலம் ஈடு இணையற்ற புத்தம்புது
டிசைன்களில் தங்க நகைகளை அறிமுகம் செய்பவர்கள்



## சிறி மீனாட்சி
## தங்க மாளிகை

187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

C\3102

---

நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவி அனைவரும் சகல
சௌபாக்கியங்களும் பெற்ற வாழ
எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

என்றும் எழில் குன்றா அழகிய தங்க நகைகளை
நீங்கள் பெற்றுக்கொள்ள

## ஒலிம்பிக் நகைத்
## தொழிலகம்



190/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

உரிமையாளர்: ச.சந்திரசேகரம் (சின்னமணி)

C\3104

---

புது யுகம் பிறக்க புத்தின்பம் மலர அனைவருக்கும்
வினோவின் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்





நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளை
அசல் 22 கரட்டில் நம்பிக்கையுடன் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

## வினோ நகைப் பூங்கா

இல 185, கஸ்தூரயார் வீதி, யாழ்ப்பாணம்.
PHONE/ FAX; 021-2824

C\3104

---

அகிலமெங்கும் அமைதி நிலவ அனைவருக்கும்
நிருத்திகாவின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்
தங்க நகை உலகில் மங்காப் புகழ் பெற்றவர்கள்
நாளைய நாகரிகத்தை இன்றே அறிமுகம் செய்பவர்கள்





## நிருத்திகா ஜுவல்லர்ஸ்

(ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்)
177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
PHONE: 021-2694

C\3105

# றப்பு மலர் 2002

அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும்
**எம் இதயம் நிறைந்த புதுவருட நல்வாழ்த்துக்கள்**

புத்தம்புதிய T.V வகைகள், டெக் வகைகள், அன்ரனா வகைகள், ரேடியோ வகைகள், ஓடியோ,வீடியோ CD பிளேயர்,கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள் அனைத்தையும் யாழ்நகரில் நியாய விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**வி.கே.இராசரத்தினம்**

(தரமானவற்றிற்கு சரியான இடம்)
**இலக்கம் 95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**Phone** 021-2056.

(C3131)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்க
யாவருக்கும் சியானாஸின்
**தித்திக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

தரமான கோட், சூட், வகைகளுக்கும்
வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்த
ரெடிமேட் ஆடை வகைகளுக்கும்

**சியானாஸ் ரெக்ஸ்ரைல்**
அன் ரெயிலறிங்

77, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-2967

துன்பங்கள் நீங்கி வாழ்வில் இன்பங்கள் சூழ
அன்பர்கள் வாடிக்கையாளர்கள்,நண்பர்கள் அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்க
**மங்கையரின் மனதைக் கொள்ளைகொள்ளும் தங்க நகைகளுக்கு**
**நாளுக்குநாள் மாறும் நவநாகரிக தங்க நகைகளுக்கு**
**மங்காத அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு**

**துர்க்கா நகைப் பூங்கா**

71, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி. யாழ்ப்பாணம். (C3133)

நியூராதிகாஸ் ஜுவல்லறி ஸ்தாபனத்தினரும்
விவேகா ஜுவல்லறி ஸ்தாபனத்தினரும் இணைந்து
தமது வாடிக்கையாளர்கள் அன்பர்கள்,நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றனர்.

**அழகிய கலைநயம் மிக்க எழிலுறு தங்க நகைகளை**
**உங்கள் மனநிறைவுடன் பெற்றுக் கொள்ள**
**யாழ் நகரிலே சிறந்து விளங்கும் தங்க நகைகளின் அரங்கம்**

**நியூராதிகாஸ் நகை மாளிகை**

**189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**விவேகா நகைமாடம்**

**131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(C3134